# செயலாற்றுகை அறிக்கை - 2017

அபிவிருத்தி நிதித் திணைக்களம்

# உள்ளடக்கம்


| | | பக்க இலக்கங்கள் |
|---|---|---|
| 1. | நிறுவனஅமைப்பு | |
| 1.1 | திணைக்களத்தின் தொலைநோக்கு மற்றும் செயற்பணிக்கூற்று | 2 |
| 1.2 | அறிமுகம் | 3 |
| 1.3 | திணைக்களத்தின் தொழிற்பாடுகள் | 4 |
| 1.4 | நிறுவன ஒழுங்கமைப்பு வரைபு | 5 |
| 2. | 2017ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை | |
| 2.1 | கண்ணோட்டம் | 6 - 7 |
| 2.2 | என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா | 7 - 16 |
| 2.3 | நுண் நிதி | 16 - 18 |
| 2.4 | விவசாயம் | 18 - 25 |
| 2.5 | சிறு உடமையாளர்கள் | 25 - 26 |
| 2.6 | உணவுப் பாதுகாப்பு | 26 - 29 |
| 2.7 | கால்நடைத் துறையின் அபிவிருத்தி | 30 - 32 |
| 2.8 | இலக்காகக் கொள்ளப்பட்ட குழுக்களுக்கான விஷேட வெகுமதிகள் | 32 - 33 |
| 3. | நிறுவன மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் | |
| 3.1 | நிர்வாகப்பிரிவு | 34 - 41 |
| 3.2 | நிதி தொடர்பான தகவல்கள் | 42 - 43 |
| 3.3 | கணக்காய்வு ஆய்வு வினா | 44 |

# 1. நிறுவன அமைப்பு

## 1.1 திணைக்களத்தின் தொலைநோக்கு மற்றும் செயற்பணிக்கூற்று

**தூரநோக்கு**

“அபிவிருத்தி நிதிக்குத் தேவையான வசதிகள் வழங்கும் அரசின் பிரதான முகவர் நிறுவனமாக மாறுவது”

**பணிக்கூற்று**

“உரியதரப்பினரின் ஒத்துழைப்புடன் சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மை அபிவிருத்திக்குத் தேவையான நிதி வளங்களை ஏற்படுத்துதல், ஆரம்ப முயற்சியாண்மைப் பிரிவுக்கான மூலதன ஈட்டம் மற்றும் அதற்குரிய கொள்கை வியூகங்களை வகுத்தல் மற்றும் அவற்றுக்கான வசதியளித்தல்”

## 1.2 அறிமுகம்

சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மை அபிவிருத்தி மற்றும் நுண்நிதித்துறையை முன்னேற்றுவதை நோக்காகக்கொண்டு 2005ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01ஆம் திகதி இத்திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது. திணைக்களம் பதவிநிலை உத்தியோகத்தர் 13 உள்ளடங்கலாக மொத்தமாக 34 ஆளணியினரைக் கொண்டுள்ளது. திணைக்களத்தின் பிரதான பணிகள் நான்கு பிரிவுகளின் கீழ் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

### 1.2.1. ஆரம்பப்பிரிவு அபிவிருத்தி மற்றும் நிருவாகப்பிரிவு

அரசின் அபிவிருத்தி மானியத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல், கொள்கைவகுப்பு, மற்றும் அபிவிருத்திக் கொள்கை முன்னெடுப்பு, கட்டுப்பாடு, ஒருங்கிணைப்பு, உணவுப் பாதுகாப்பு, குறைவருமானம் பெறுவோர் பொருளாதார அபிவிருத்தி ஊடாக கிராமிய குடும்பவருமானம் அதிகரிப்பு பற்றிய கொள்கை, முன்னெடுப்பு போன்றவற்றிற்கான வசதியளிப்பும் ஏனைய திணைக்களத்தின் அன்றாட நிருவாக நடவடிக்கைகளும்.

### 1.2.2. அபிவிருத்தி நிதிப்பிரிவு

கடந்த பல தசாப்தங்களாக வறுமையொழிப்புக்காக உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அணுகுமுறையான நிதியீட்டம் இலங்கையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. நாடளாவிய ரீதியில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் கிராமிய மட்டத்தில் வணிக வங்கிகளினதும், அரச சார்பற்ற நிறுவனங்களினதும் செயற்பாடுகள் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. நிதியானது நடுத்தர வருமானம் பெறும் குடும்பத்தினரது வருவாயை உயர்த்தவும் குறைவருமானம் பெறும் குடும்பத்தினரது நுகர்வுச் செலவுக்குதவவும் அவர்களது சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்கும் அனைத்து பிரசைகளினதும் நுகர்வை அதிகரிப்பதற்கும் பெண்களின் சமூக, பொருளாதார மட்டங்களை அதிகரிப்பதற்கும் பேருதவி புரிகிறது.

### 1.2.3. சிறியமற்றும் நடுத்தர முயற்சியாண்மை அபிவிருத்திப்பிரிவு

இலங்கை அரசின் ஒட்டு மொத்த கொள்கைச் சட்டகத்தினுள் சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மைப்பிரிவு, பிரதான வியூகப்பகுதியாக அடையாளம் காணப்பட்டுள்ளது. ஏனெனில் அதனூடாக பொருளாதார அபிவிருத்தி, பிரதேச அபிவிருத்தி, வேலைவாய்ப்பு, மற்றும் வறுமையொழிப்பு என்பன ஏற்படுவதனாலாகும். அவை தெளிவாக இலங்கைப் பொருளாதாரத்தில் செல்வாக்குச் செலுத்துவதனூடாக சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் பிரிவின் ஊடாக இலங்கையின் மொத்த முயற்சியாண்மைகளில் 75% மும், வேலைவாய்ப்பில் 45% மும், மொத்தத்தேசிய உற்பத்தியில் 52% மும் பங்களிப்புச் செய்வதனாலாகும்.

### 1.2.4. அபிவிருத்தி நிதி பற்றிய வியூகத்திட்டமிடல் பிரிவு

மேலதிக அறுவடை முகாமைத்துவம் செய்யப்பட்டு சிறிய மற்றும் நடுத்தர அளவு விவசாயிகள் ஏனைய சந்தைக் காரணிகளின்பால் கவனத்தைச் செலுத்தி கேள்வி நிரம்பல் காரணிகளில் சமநிலையை ஏற்படுத்துதல். தேசிய பொருளாதார அபிவிருத்திச் செயன்முறைக்கு பெறுமதியான பங்களிப்பைச் செலுத்தி சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மையினரை ஊக்குவித்து புதிய முயற்சியாளர்களை அடையாளங் காண்பதை நோக்காகக் கொண்டு திணைக்களத்தின் பங்களிப்புடன் சலுகைக்கடன்கள், திறைசேரிப் பிணை, மற்றும் தொழிநுட்ப உதவி உட்பட அரசின் பல்வேறு சலுகைகளை வழங்குவது.

## 1.3 திணைக்களத்தின் தொழிற்பாடுகள்

- சிறிய மற்றும் நடுத்தர அளவு முயற்சியாண்மைப் பிரிவுகளின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு தேவையான கொள்கை தந்திரோபாயங்கள் நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றவற்றை உருவாக்குதலும் அதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்

- சந்தைத் தரவுகளை ஆய்வு செய்து சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மைகளின் வளர்ச்சியைப் பாதிக்கும் பிரதான பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றுக்காக திறமையான தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பது.

- பொருளாதார அபிவிருததியை நோக்காகக் கொண்டு அரசினால் அமுல்படுத்தப்படும் மானியத் திட்டங்களின் முன்னேற்ற ஆய்வு மற்றும் அதற்குத் தேவையான கொள்கைகளை வகுத்தலுக்கான வசதிகளை வழங்குதல்

- சந்தைத் தேவைகளுக்கேற்ப வங்கி காப்புறுதி சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மைகள் மற்றும் நிதி முயற்சியாண்மைப் பிரிவு நிதிப்பிரிவுகளுக்கான சட்டங்களை உருவாக்குதலும் அவற்றிற்குத் தேவையான வசதிகளை வழங்குதலும்

- சிறிய மற்றும் நடுத்தர விவசாய முயற்சிப்பிரிவு வங்கி பணச்சந்தை மற்றும் ஏனைய பிரிவுகளுக்குரிய அரசின் வருடாந்த வரவு செலவுத்திட்டம் தயாரித்தலுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல்


- சிறிய மற்றும் நடுத்தர நிதித்துறை முயற்சியாண்மைப் பிரிவு ஆரம்ப விவசாயப் பிரிவு மற்றும் ஏனைய பிரிவுகளுக்குரிய வரவு செலவுத்திட்டப் பிரேரணைகளை நடைமுறைக்கிடுதல் வெளிநாட்டுக்கடன் மூலம் நடைமுறைப்படுத்தும் திட்டங்களை செயற்படுத்துதல்

- சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மையுடன் தொடர்புடைய விவசாய தொழில்நுட்ப மற்றும் சேவைத்துறை தொடர்பான புள்ளி விபரங்களைச் சேகரித்து அவற்றை ஆய்வுசெய்து காணப்படும் தடைகளைக் கண்டறிந்து கொள்கையளவில் தலையிட்டுத் தீர்த்து வைப்பது.

- அரச ஆதரவில் அமுல்படுத்தப்படும் சலுகைத் திட்டங்களைக் கண்டறிவது.

- அரச கொள்கைகளுக்கிணங்க சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மைப் பிரிவின் அபிவிருத்திக்கான கருத்திட்டங்களுக்காக தேசிய வங்கி மற்றும் நிதி வசதிகளை வழங்குதல்.

## 1.4 நிறுவன ஒழுங்கமைப்பு வரைபு




பி.ப. - பிரதிப் பணிப்பாளர்
உ.ப. - உதவிப் பணிப்பாளர்
த.உத். - தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப உத்தியோகத்தர்
அ.உ. - அபிவிருத்தி உத்தியோகத்தர்
த.உ. - தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப உதவியாளர்
பொ.மு. - பொது முகாமைத்துவ உதவியாளர்
மு.உ. - முகாமைத்துவ உதவியாளர்
கா.உ. - காரியாலய தொழில் உதவியாளர்

# 2. 2017ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை

## 2.1 கண்ணோட்டம்

அரசாங்கத்தினால் அண்மையில் முன்வைக்கப்பட்ட நீலப்பசுமை அபிவிருத்தி உபாயத்தின் ஊடாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் துறை நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமூக அபிவிருத்திக்கு முக்கியமான உபாயத் துறையொன்றாக இனங்காணப்பட்டுள்ளது. 2017ஆம் ஆண்டில், வேலை வாய்ப்புக்கள், வருமானத்தை உருவாக்கல், வறுமையை ஒழித்தல், ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் பிரதேச அபிவிருத்தி என்பனவற்றில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் பிரதான மூலமாக இலங்கையின் பொருளாதாரத்துக்கு குறிப்பிடத்தக்க அளவில் பங்களிப்பைச் செலுத்தியுள்ளது. நிதியைப் பெற்றுக் கொள்வதற்கான அணுகலுடன் தொடர்புடைய பிரச்சினைகள் தொடர்ச்சியாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளின் வளர்ச்சிக்கும், மற்றும் பரவலுக்கும் தடைகளை ஏற்படுத்துவதனால், இந்நிலைமையானது சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுடன் ஒப்பிடுகையில் குறைவான செயலூக்கத்தினை உடையதாகக் காணப்படுவதனாலும், இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக ஆட்சியில் இருந்த அனைத்து அரசாங்கங்களும் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப, பல்வேறு வெளிநாட்டு நிதி நிறுவனங்களின நிதி உதவியுனுடனும் மற்றும் உள்நாட்டு நிதி உதவியுடனும் பல்வேறு முயற்சிகளை எடுத்துள்ளன.

நிதியைப் பெற்றுக் கொள்வதற்கான அணுகலில் உள்ள பிரச்சினையானது இன்னும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் பிரதான பிரச்சினையொன்றாகக் காணப்படுவதனால், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்காக "என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா" எனும் தொனியின் கீழ் நிதி மற்றும் நிதியல்லாத வசதிகள் உள்ளடங்கலாக விரிவான பொதியொன்று (Package) அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் வரலாற்று ரீதியாக இலங்கையர்களிடமிருந்த, இயற்கையிலேயே கிடைக்கப் பெற்ற வர்த்தகத் திறன்களைப் பயன்படுத்துவதன் மூலம் "தொழில்முயற்சிகளுக்கான சுவர்க்கமொன்றை" (Pradise of Enterpreneurs) உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. "என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா கடன் நிகழ்ச்சித் திட்டத்திற்குள்" 11 வட்டி மானியக் கடன் திட்டங்களும், வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் ஆதரவுடன் நடைமுறைப்படுத்தப்படும் 3 மீள்நிதிப்படுத்தல் கடன் திட்டங்களும், 2 நிதி மற்றும் நிதியல்லாத வசதிகளை வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களும் உள்ளடங்கலாக 16 விசேட திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதன் பிரகாரம், "என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா" எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான கடன் வசதிகளை மாத்திரமல்லாது நிதிப் பாய்ச்சல் முகாமைத்துவம், வியாபாரத் திட்டங்களைத் தயாரித்தல், கணக்குகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல், வரிக் கணிப்பீடுகள், சந்தைத் தொடர்புகளை விருத்தி செய்தல், மீள் கொள்வனவு நடவடிக்கைகளுக்கு அவசியமான நிதியல்லாத தொழில்நுட்ப வசதிகளையும் வழங்குகின்றது. வியாபாரச் சூழலுக்குள் இருக்கும் விவசாயிகள், இளைஞர்கள், பெண் தொழில்முயற்சியாளர்கள், சுய தொழில்களில் ஈடுபட்டுள்ளோர், மற்றும் ஏனைய விசேடமாக இலக்காகக் கொள்ளப்பட்ட குழுக்கள் போன்ற சகல பிரிவினர்களும் இந்நிகழ்ச்சித் திட்டத்திற்குள் உள்ளடக்கப்படுகின்றனர். இந்த "என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா" நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக உற்பத்திப் பொருளாதாரத்தை ஊக்குவித்தல், ஒரு நபருக்கான தலா வருமானத்தை ஐஅடொ 5,000 வரை அதிகரித்தல், ஒரு மில்லியன் புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்கல், ஏற்றுமதி வருமானத்தை இரட்டிப்பாக்கல், 5 சதவீத தொடர்ச்சியான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியொன்றை அடைதல், ஆகிய இன்னோரன்ன அரசாங்க இடைக்கால இலக்குகளை அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

2017ஆம் ஆண்டிற்குள் அரசாங்கத்தினால் பாரிய அளவில் முதலீடு செய்யப்பட்ட மற்றுமொரு துறையாக விவசாயத் துறையை இனங்காண முடியும். விவசாய சமூகத்திற்கு உச்ச அளவிலான நன்மைகளை வழங்குவதற்கும், அரசாங்க உரத்திற்கான நிதி மானிய நிகழ்ச்சித் திட்டம், "கெத்தட்ட அருண பொஹொர திரிய", தேசிய பயிர் காப்புறுதித் திட்டம், விவசாயிகளின் ஓய்வூதியத் திட்டம், நெற்கொள்வனவு நிகழ்ச்சித் திட்டம், நவீன விவசாயக் களஞ்சியக் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டம் போன்ற இன்னோரன்ன பிரதான நிகழ்ச்சித் திட்டங்கள் தேவைகளுக்கேற்ப விரிவாக்கப்பட்டு 2017ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

அனைத்து நெல் விவசாயிகளும், பெருந்தோட்டத்துறை சிறு உடமையாளர்கள், சோளம், சோயா அவரை, உருளைக் கிழங்கு, பெரிய வெங்காயம், மற்றும் மிளகாய் பயிரிடும் சிறிய அளவிலான விவசாயிகள் போன்றோர் உள்ளடங்கக் கூடிய வகையில் நடைமுறைப்படுத்தப்படும் உரத்திற்கான நிதி மானிய நிகழ்ச்சித் திட்டம் 2017ஆம் ஆண்டிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்நிதி மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு உச்சப் பயனை அளிக்கும் நோக்குடன் இந்நிதி

மானியத்துடன் தொடர்புடைய விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக வரவு வைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இப்புதிய திட்டத்துக்குள், அவரவருக்கு விருப்பமானபடி இரசாயன உரம், சேதன உரம், அல்லது கலப்பு உரத்தினைப் பயன்படுத்துவதற்கும் அவசியமான உரத்தினை திறந்த சந்தையில் கொள்வனவு செய்வதற்கும் விவசாயிகளுக்கு சுதந்திரம் உண்டு. மறுபுறம், பூரண இரசாயன உரத்தினைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக சேதன அல்லது கலப்பு உரத்தினைப் பயன்படுத்துவதற்கு விவசாயிகள் ஊக்குவிக்கப்படுவதனால், இப்புதிய திட்டத்தின் ஊடாக இரசாயன உரத்தின் பூரண பயன்பாடானது எதிர்மறையான சுற்றுச்சூழலின் தாக்கத்தினைக் குறைப்பதற்கும் வழி வகுக்கும்.

பிரதான பயிர்களை உள்ளடக்குவதற்கான குறியீடுகளை அடிப்படையாகக் கொண்ட பயிர் காப்புறுதித் திட்டமொன்று இல்லாததனால், கடந்த காலங்களில் ஏற்பட்ட கடும் வறட்சியினால் ஏற்பட்ட பயிர்களின் அழிவுகளுக்கு நட்டஈடு வழங்குவதற்கும், வறட்சி மானியத்தினை வழங்குவதற்கும் ரூபா. 5 பில்லியனுக்கு மேற்பட்ட தொகையொன்றை 2017ஆம் ஆண்டில் அரசாங்கத்திற்கு ஏற்க வேண்டியேற்பட்டது.

எனவே, 6 பிரதான பயிர்களுக்கும் ஒரு ஏக்கருக்கு ரூபா. 40,000/- அடிப்படை காப்புறுதி உள்ளடக்கமொன்றுடன் தேசிய பயிர் காப்புறுதித் திட்டம் அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டது. இயற்கை அழிவுகளின் காரணமாகப் பாதிக்கப்பட்ட சகல பிரதான பயிர்களுக்குமாக பயிர்களின் அழிவுகள் இதன் மூலம் உள்ளடக்கப்படுவதோடு, ஏற்படும் பயிர் அழிவுகளின் உண்மையான பெறுமதி (சந்தைப் பெறுமதி) இப்பயிர் காப்புறுதித் திட்டத்தின் மூலம் ஈடு செய்யப்படுவதனால் அரசாங்கமும், விவசாயிகளும் செலுத்த வேண்டியுள்ள நிதி ரீதியான இடர் இதன் மூலம் குறைக்கப்படுகின்றது.

நாட்டின் விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்காக தமது வாழ்வின் இளம் பருவத்தை அர்ப்பணித்த முதிய விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்காக விவசாயிகளுக்கான ஓய்வூதியத் திட்டமானது 2017ஆம் ஆண்டிலும் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இப்பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்துக்கு விவசாயிகளின் பங்களிப்பு ஒப்பீட்டு ரீதியில் மிகவும் குறைவான மட்டமொன்றில் காணப்பட்டதனால் அதற்கு அவசியமான மொத்தச் செலவானது அரசாங்கத்தினால் ஏற்கப்பட்டது.

அரசாங்கத்தின் உத்தரவாத விலையை நெல் விவசாயிகளுக்கு உறுதிப்படுத்துவதற்காக நெற்கொள்வனவு நிகழ்ச்சித் திட்டம் 2017ஆம் ஆண்டிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆயினும், 2016/17 பெரும் போகம் மற்றும் 2017 சிறு போகங்களில் அறுவடை குறைவடைந்தமையினால் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட உத்தரவாத விலையை விட உயர்வான விலைக்கு மொத்த நெல் உற்பத்தியும் தனியார் துறையினால் கொள்வனவு செய்யப்பட்டதனால் 2017ஆம் ஆண்டு காலப்பகுதியில் நெல் சந்தைப் படுத்தும் சபையினால் நெல்லைக் கொள்வனவு செய்ய முடியாமல் போய் விட்டது. நாட்டில் நிலவிய மோசமான காலநிலையின் காரணமாக அதற்கு முன்னைய ஆண்டின் நெல்லுற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 2017ஆம் ஆண்டில் நெல்லுற்பத்தியில் வீழ்ச்சிப் போக்கொன்றையே பதிவு செய்திருந்தது. எனவே, நாட்டின் வாழ்க்கைச் செலவில் நேரடியாகத் தாக்கம் செலுத்தும் உள்ளூர் சந்தையில் நெல் விலையின் அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதற்காக இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் மீது விதிக்கப்பட்டிருந்த விசேட பொருட்களுக்கான தீர்வையை நீக்குவதன் மூலம் அரசாங்கத்தினால் உள்ளூர் நுகர்வுக்கான அரிசியை இறக்குமதி செய்வதற்கு ஊக்குவிக்கப்பட்டது.

மேலும், உள்ளூர் உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கும் நோக்குடனும், உள்ளூர் சந்தையில் நியாயமான சில்லறை விலையைப் பேணுவதோடு, உலக சந்தையில் நிலவிய விலை ஆதாயத்தை (Price gain) அரசாங்க வருமானமாக மாற்றும் நோக்கத்துடன் விசேட பண்டங்களுக்கான தீர்வை, உச்ச சில்லறை விலை (MRP) மற்றும் இறக்குமதி ஏற்றுமதி செஸ் வரி என்பன திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

## 2.2 என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா

அரசாங்கத்தின் இடைக்கால அபிவிருத்தி இலக்குகளை அடையும் பொருட்டு உற்பத்திப் பொருளாதாரத்திற்கு புத்துயிரூட்டுதல் எனும் அரசாங்கத்தின் குறிக்கோளானது “என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா” எனும் தொனிப் பொருளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. “என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா” கடன் நிகழ்ச்சித் திட்டம் பிரதானமாக பொருளாதார அபிவிருத்தியின் ஒரு உந்து சக்தியாக இனங்காணப்பட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் துறைக்கு ஆதரவளிப்பதற்கும், நவீன விவசாய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலமும் மற்றும் இயந்திரமயமாக்குவதற்கான குறைந்த செலவிலான மூலதனத்தை இடுவதன் ஊடாக சிறிய அளவிலான வாழ்வாதார (பிழைப்பு) விவசாயத்திலிருந்து வர்த்தக அளவிலான விவசாயத்தில் ஈடுபட்டுள்ள விவசாய உற்பத்திக் கம்பனிகள் மற்றும் விவசாயிகளுக்கு ஆதரவளிப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்படும். அதே போல, அதன் மூலம், எதிர்கால வலுப் பிரச்சினைக்கு முகங்கொடுக்கும்

நோக்கத்துடன் உயிர்ச்சுவட்டு எரிபொருள்களிலிருந்து புத்துயிராக்கும் வலுவுக்கு மாறுவதற்கு எதிர்பார்க்கும் வீட்டுரிமையாளர்களும், கைத்தொழிலாளர்களும் ஊக்குவிக்கப்படுவார்கள்.

"என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா" வின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட தனியார் துறையின் தொழில்முயற்சிகளுக்கு மாத்திரமல்லாது நுண் வியாபாரம், சுய தொழிலாளர்கள், இளம் தொழில்முயற்சியாளர்கள் போன்றோருக்கு வசதிகளளிக்கப்படும். அதே போல, இந்நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட சமூகத்தில் முக்கியமான குழுவான மிகவும் பாதுகாப்பான பாடசாலை சேவையொன்றை ஸ்தாபிப்பதற்கும், மற்றும் பழைய சிற்றூர்திகளிலிருந்து (வான்களிலிருந்து) 32 ஆசனங்களை விட அதிகமான ஆசனங்களைக் கொண்ட பேருந்துகளுக்கு மாறுவதற்கு பாடசாலை வான்களின் உரிமையாளர்களுக்கும், தமது வீடுகளின் நிர்மாண வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கும், நெருக்கடியான சூழ்நிலைகளின் கீழ் சேவை செய்யும் ஊடகவியலாளர்களுக்கு அவசியமான ஊடக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கும் இதன் மூலம் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். மேலும், நிதி வாரியான உதவிகளுக்கு மேலதிகமாக புதிய கம்பனிகளை உருவாக்குவதற்கான தொழில்நுட்ப உதவி, நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், வரிக் கணிப்பீடு, சந்தை வாய்ப்புக்களை விருத்தி செய்தல், நிதி நிறுவனங்களுடன் பேச்சு வார்த்தைகளை மேற்கொள்ளல், உள்ளடங்கலாக நிதியல்லாத தொழில்நுட்ப உதவிகளையும் வழங்குகிறது.

அதன் பிரகாரம், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்கள், விவசாயிகள், இளைஞர்கள், யுவதிகள், பெண் தொழில்முயற்சியாளர்கள், சுய தொழில்களில் ஈடுபட்டுள்ளோர், மற்றும் சமூகத்தில் முக்கியமான குழுக்களுக்கும் ஆதரவளிப்பதற்காக "என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா" கடன் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 11 வட்டி மானியக் கடன் திட்டங்களும், வெளிநாட்டு நிதியைப் பெற்றுக் கொள்ளும் 3 மீள்நிதிக் கடன் திட்டங்களும், மற்றும் 02 நிதியல்லாத ஆதரவு நிகழ்ச்சித் திட்டங்களும், உள்ளடங்கக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட 16 பிரேரணைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. மானிய வீதம், வட்டி வீதம், பயனாளிகளுக்கான உச்சக் கடன் தொகை போன்ற கடன் திட்டங்கள் தொடர்பான விபரங்கள் விசேட குறிப்பு 2.1 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

**விசேட குறிப்பு 2.1 : "என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் நிதி மற்றும் நிதியல்லாத நிகழ்ச்சித் திட்டங்கள்**

| கடன் திட்டத்தின் பெயர் | விபரம் |
|---|---|
| **1. வட்டி மானிய கடன் திட்டம்** | |
| 1.1 ரன் அஸ்வென்ன | **முதலாவது குழு**<br>பயனாளிகள் - சிறிய அளவிலான விவசாயிகள் , கமநல நிறுவனங்கள், அலங்கார மலர்களைப் பயிரிடுவோர், மீன் வளர்ப்புக் கைத்தொழிலில் ஈடுபடும் வியாபாரிகள்<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - 5,000,000<br>வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் - 13%<br>மானிய வட்டி வீதம் - 50%<br>கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் - 6.75%<br><br>**இரண்டாம் குழு**<br>பயனாளிகள் - விவசாய உற்பத்திப் பொருட்களைப் பதனிடும் நிறுவனங்கள்<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - 300,000,000<br>வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் - 13.5%<br>மானிய வட்டி வீதம் - 50%<br>கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் - 6.75%<br><br>**மூன்றாம் குழு**<br>பயனாளிகள் - வர்த்தக அளவிலான விவசாயப் பண்ணைகள்<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - 750,000,000<br>வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் - 13.5%<br>மானிய வட்டி வீதம் - 50%<br>கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் - 6.75% |
| 1.2 கொவி நவோதா | பயனாளிகள் - சிறிய அளவிலான விவசாயிகள், கமநல நிறுவனங்கள், (விவசாய நடவடிக்கைகளை இயந்திரமயமாக்கல்)<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - 500,000<br>வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம - 13.5%<br>மானிய வட்டி வீதம் - 75%<br>கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் - 3.38% |

| கடன் திட்டத்தின் பெயர் | விபரம் |
| --- | --- |
| 1.3 ரிய சக்தி | பயனாளிகள் - பாடசாலை சிற்றூர்திகளின் (வான்களின்) உரிமையாளர்கள்<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - 4,000,000<br>வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் - 13.5%<br>மானியக் வட்டி விதம் - 75%<br>கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் - 3.38% |
| 1.4 ரிவி பல சவி | பயனாளிகள் - சூரிய சக்தி முறைமையை பொருத்துவதற்கு எதிர்பார்க்கும் தனிப்பட்ட வீட்டு அலகுகள்<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - 350,000<br>வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் - 13.5%<br>மானிய வட்டி வீதம் - 50%<br>கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் - 6.75% |
| 1.5 திரி சவிய | பயனாளிகள் - கோழி இறைச்சி உற்பத்தித் தயாரிப்பாளர்கள், சுய தொழில் முயற்சியாளர்கள்<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - 50,000<br>வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் - 13.5%<br>மானிய வட்டி வீதம் - 100%<br>கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் - 0% |
| 1.6 ஜய இசுர | <u>**முதலாம் குழு**</u><br>பயனாளிகள் - வருடாந்த விற்பனை ரூபா. 10 மில்லியனுக்கும், ரூபா. 250 மில்லியனுக்கும் இடையிலும், ஊழியர்களின் எண்ணிக்கை 10 இற்கும் 50 இற்கும் இடையிலும், உள்ள விவசாயத் துறையான கடற்றொழில், கால்நடைகள், அலங்கார மலர்ச்செய்கை, வீட்டுத் தோட்டம், மற்றும் மென் பொறியியல், அச்சிடல், சுற்றுலா கைவினைப் பொருட்கள், ஆடைகள், தகவல் தொழில்நுட்பம், மற்றும் உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்கள்<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - 100,000,000 (ஏற்றுமதி)<br>50,000,000 (ஏற்றுமதியல்லாத)<br>வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் - 13.5%<br>மானிய வட்டி வீதம் - 50%<br>கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் - 6.75%<br><br><u>**இரண்டாம் குழு**</u><br>பயனாளிகள் - வருடாந்த விற்பனை ரூபா. 250 மில்லியனுக்கும், ரூபா. 750 மில்லியனுக்கும் இடையிலும், ஊழியர்களின் எண்ணிக்கை 51 இற்கும் 300 இற்கும் இடையிலும், உள்ள விவசாயத் துறையான கடற்றொழில், கால்நடைகள், அலங்கார மலர்ச்செய்கை, வீட்டுத் தோட்டம், மற்றும் மென் பொறியியல், அச்சிடல், சுற்றுலா கைவினைப் பொருட்கள், ஆடைகள், தகவல் தொழில்நுட்பம், மற்றும் உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்கள்<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - 400,000,000 (ஏற்றுமதி)<br>200,000,000 (ஏற்றுமதியல்லாத)<br>வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் - 13.5%<br>மானிய வட்டி வீதம் - 25%<br>கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் - 10.12% |
| 1.7 சொந்துரு பியச | பயனாளிகள் - 1,000 சதுர அடியை விடக் குறைந்த நிலப்பரப்பைக் கொண்ட வீடுகள்<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா) - 200,000<br>வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் - 13.5%<br>மானிய வட்டி வீதம் - 50%<br>கடன்பட்டோரால் செலுத்த வேண்டிய வட்டி வீதம் - 6.75% |
| 1.8 மாத்ய அருண | <u>**முதலாம் குழு (புதிய ஊடக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு)**</u><br>பயனாளிகள் - பதிவு செய்துள்ள ஊடகவியலாளர்கள்<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - 300,000<br>வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் - 13.5%<br>மானிய வட்டி வீதம் - 100%<br>கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் - 0% |

| கடன் திட்டத்தின் பெயர் | விபரம் |
|---|---|
| | **<u>இரண்டாம் குழு (தற்போது இருக்கும் ஊடக உபகரணங்களை புதுப்பிப்பதற்கு)</u>**<br>பயனாளிகள் - பதிவு செய்துள்ள ஊடகவியலாளர்கள்<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - 150,000<br>வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் - 13.5%<br>மானிய வட்டி வீதம் - 50%<br>கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் - 6.75% |
| 1.9 "எரம்பும" கடன் திட்டம் | பயனாளிகள் - பட்டதாரி இளைஞர்கள்<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - 1,500,000<br>வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் - 12%<br>மானிய வட்டி வீதம் - 100%<br>கடன்பட்டோரால் செலுத்த வேண்டிய வட்டி வீதம் - 0%<br>ஏனைய வசதிகள் - அரசாங்கத்தின் முழுப் பொறுப்பு |
| 1.10 பசுமைக் கடன் | **<u>முதலாம் குழு</u>**<br>பயனாளிகள் - உக்கிப்போகக் கூடிய மூலப்பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் பொதியிடும் பொருட்களை உற்பத்தி செய்வோர், சிறிய அளவிலான ஹோட்டல் உரிமையாளர்கள், சேதன உரத்தினை தயாரிப்போர், முச்சக்கர வண்டிகளின் உரிமையாளர்கள்<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - 1,000,000<br>வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் - 13.5%<br>மானிய வட்டி வீதம் - 50%<br>கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் - 6.75%<br><br>**<u>இரண்டாம் குழு – "ஹோம்ஸ்டே" (Homestay) நிகழ்ச்சித்திட்டம்</u>**<br>பயனாளிகள் - சுற்றுலாத் துறைக்கான சேவைகளை வழங்கும் சிறிய அளவிலான ஹோட்டல் உரிமையாளர்கள்<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - 5,000,000<br>வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் - 13.5%<br>மானிய வட்டி வீதம் - 50%ஐ விட அதிகமான<br>கடன்பட்டோரால் செலுத்த வேண்டிய வட்டி வீதம் - 6% |
| 1.11 நடுத்தர வருமானம் பெறுவோருக்கான வீட்டுக் கடன் திட்டம் | பயனாளிகள் - நவீன வசதிகளுடன் கூடிய வீடொன்றைக் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்த்துள்ள நடுத்தர வருமானம் கொண்ட இளைஞர் யுவதிகள்<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - 5,000,000<br>வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் - 12%<br>மானிய வட்டி வீதம் - 40%<br>கடன்பட்டோரால் செலுத்த வேண்டிய வட்டி வீதம் - 7% (மானியம் வழங்கப்படுவது முதல் 5 வருடங்களுக்கு மட்டும்) |
| **2. வெளிநாட்டுக் கடன் உதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் கடன் நிகழ்ச்சித் திட்டங்கள்** | |
| 2.1 கூரையின் மீது பொருத்தப்பட்ட சூரிய சக்தி உருவாக்கல் கருத்திட்டம் (ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதி உதவி வழங்கப்படும்) | **<u>முதலாம் குழு</u>**<br>பயனாளிகள் - தனியார் வீடுகள்<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - 7,500,000<br>கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் - 8%<br><br>**<u>இரண்டாம் குழு</u>**<br>பயனாளிகள் - தொழில்முயற்சியாளர்கள்<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - குறைந்தது 7,500,000/- (உச்ச வரையறை கிடையாது)<br>கடன்பட்டோரால் செலுத்த வேண்டிய வட்டி வீதம் - 8%<br>வெளிநாட்டுக் கடன் வழங்கும் நிறுவனம் - ஆசிய அபிவிருத்தி வங்கி (முதலாவது தடவைக்கான நிறுவனம் ஐஅடொ 50 மில்லியன் மற்றும் முன்னேற்றச் செயலாற்றுகையை அடிப்படையாகக் கொண்டு ஐஅடொ 200 மில்லியன் வரை அதிகரித்தல் |
| 2.2 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிக் கடன் திட்டம் (SMELoC) | பயனாளிகள் - சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்கள்<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - 50,000,000<br>கடன்பட்டோரால் செலுத்த வேண்டிய வட்டி வீதம் - 11 – 14%<br>வெளிநாட்டுக் கடன் வழங்கும் நிறுவனம் - ஆசிய அபிவிருத்தி வங்கி (ஐஅடொ 175 மில்லியன்) |

| கடன் திட்டத்தின் பெயர் | விபரம் |
| --- | --- |
| 2.3 பவித்ர கங்கா | பயனாளிகள் - ஏற்கனவே களனி கங்கைக்கும், களப்புகளுக்கும் தமது கழிவுப்பொருட்களை வெளியேற்றும் கம்பனிகள்<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - 30,000,000<br>கடன்பட்டோரால் செலுத்த வேண்டிய வட்டி வீதம் - 6.5%<br>வெளிநாட்டுக் கடன் வழங்கும் நிறுவனம் - ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் |
| **3. நிதி மற்றும் நிதியல்லாத உதவி நிகழ்ச்சித் திட்டங்கள்** | |
| 3.1 தேசிய கடன் உத்தரவாத நிறுவனம் (NCGI) | பயனாளிகள் - சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்கள்<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - மொத்தக் கடன் தொகையில் 1/3<br>வருடாந்த தவணை - 1 - 2 %<br>வெளிநாட்டுக் கடன் வழங்கும் நிறுவனம் - ஆசிய அபிவிருத்தி வங்கி (ஐஅடொ 100 மில்லியன்) |
| 3.2 சிறிய அளவிலான நிறுவனங்களை ஸ்தாபிப்பதற்கான ஆதரவை வழங்கல் | பயனாளிகள் - இளைஞர்கள். யுவதிகள், பெண்கள், விவசாயிகள், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கம்பனிகளை ஸ்தாபிப்பதற்கு அக்கறை செலுத்தும் நபர்கள்<br>நிதியல்லாத நன்மைகள் - கம்பனிகளை ஸ்தாபிப்பதற்கான தொழில்நுட்ப உதவி, புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல், நிதி நிறுவனங்களுடன் கலந்துரையாடல், சந்தைக்குள் பிரவேசித்தல்,<br>நிதிசார் நன்மைகள் - அரச வங்கிகளின் ஊடாக குத்தகை வசதிகள் மற்றும் 75 சதவீத குத்தகைச் செலவு அரசாங்கத்தினால் செலுத்தப்படும் “என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா” நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சலுகை அடிப்படையிலான கடன்<br>கடன்பட்டோரால் செலுத்த வேண்டிய வட்டி வீதம் - 6.75% |

### 2.2.1 வட்டி மானிய கடன் திட்டம்

இவ்வனைத்து சலுகை அடிப்படையிலான கடன் திட்டங்களும் அரச மற்றும் தனியார் வங்கிகளின் ஊடாக அவ்வங்கிகளின் சொந்த நிதியைப் பயன்படுத்துவன் மூலம் நடைமுறைப்படுத்தப்படுவதோடு, அரசாங்கத்தினால் வட்டி மானியமும் வழங்கப்படுகின்றது. அப்பத்து கடன் திட்டங்களுக்குள், 08 கடன் திட்டங்கள் 2017 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டதோடு, 2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் படி, 2018 மார்ச் 31ஆம் திகதியளவில் ரூபா. 23,885 மில்லியன் 9,600 பயனாளிகளுக்கிடையில் பகிரப்பட்டுள்ளது. இவை தொடர்பான விபரங்களடங்கிய முன்னேற்ற அட்டவணை 2.1 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.1 : 2018 மார்ச் 31 ஆம் திகதியில் வட்டி மானிய நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றங்கள்**

| தொடர் இல | கடன் திட்டம் | பயனாளிகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை (ரூபா. மில்லியன்) |
| --- | --- | --- | --- |
| 1 | சொந்துரு பியச | 5,862 | 1,164.70 |
| 2 | கொவி நவோதா | 498 | 201.60 |
| 3 | ரன் அஸ்வென்ன | 1,275 | 3,551.20 |
| 4 | ரிய சக்தி | 537 | 1,554.90 |
| 5 | ரிவி பல சவி | 390 | 134.60 |
| 6 | ஜய இசுர | 714 | 17,181.50 |
| 7 | திரி சவிய | 2 | 0.60 |
| 8 | மாத்ய அருண | 322 | 96.00 |
| | **மொத்தம்** | **9,600** | **23,885.10** |

மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம்

2018 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் உக்கிப் போகக் கூடிய உற்பத்திப் பொருட்கள், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஹோட்டல் உரிமையாளர்கள், மற்றும் வியாபாரங்களை ஆரம்பிக்க விரும்பும் இளம் பட்டதாரிகளுக்கு ஆதரவளிப்பதற்காக “பசுமைக்கடன்”, மற்றும் “எரம்புமு” எனும் பெயரில் 02 கடன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. 2018 ஜனவரி மாதம் 01ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் பொலித்தீன் பாவனை தடை செய்யப்பட்டதனால், உக்கிப் போகக் கூடிய மூலப்பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் பொதியிடக் கூடிய பொருட்களை உற்பத்தி செய்யும் உள்ளூர் தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்காக “பசுமைக் கடன்” சலுகை அடிப்படையிலான கடன் திட்டம் முன்மொழியப்பட்டதோடு, அதன் மூலம் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பாவனையை அதைரியப்படுத்துவதன் மூலம் சுற்றுச் சூழல் மாசடைவதைத் தடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், உல்லாசப் பிரயாணிகளுக்கு சேவைகளை வழங்கும் சிறிய அளவிலான ஹோட்டல் உரிமையாளர்களும், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின்

கீழ் பதிவு செய்துள்ள வீட்டுரிமையாளர்கள் தமது வீடுகளை குறிப்பிட்ட தர நியமங்களுக்கு ஏற்ப, புதுப்பிப்பதன் மூலம் "ஹோம்ஸ்டே" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உள்ள இக்கடன் திட்டத்தின் மூலம் கடன் வசதிகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

பொருளாதார அபிவிருத்திச் செயன்முறையை நோக்கி இளம் பட்டதாரிகளைக் கவர்ந்திழுக்கும் பொருட்டு அவர்களை ஊக்குவிக்கப்பதற்காக சம்பூரணமாக அரசாங்கத்தின் உத்தரவாதத்துடன், பூச்சிய வட்டி வீதத்தின் கீழ், காசுப்பாய்ச்சலை அடிப்படையாகக் கொண்டு, கடனொன்றை வழங்குவதன் மூலம் சாத்தியமான வியாபார மார்க்கங்களாக அவர்களது புத்தாக்கங்களைப் பயன்படுத்துவதன் மூலம் "எரம்பும" முன்மொழிவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

2018ஆம் ஆண்டில், இவ்வட்டி மானியக் கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன்களுக்கு மானியம் வழங்குவதற்கு அரசாங்கத்தினால் ரூபா. 5,810 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, பங்கேற்பு நிதி நிறுவனங்களினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை பயன்படுத்தப்பட்டால் 2018ஆம் ஆண்டிற்கு (அட்டவணை 2.2) ரூபா. 73,650 மில்லியன் பெறுமதியான கடன் தொகையொன்றை ஒதுக்கீடு செய்யக் கூடியதாக உள்ளது.

**அட்டவணை 2.2 : வட்டி மானியக் கடன் திட்டத்தின் கீழ் கடன் வழங்கக் கூடிய இயலளவு - 2018**

| தொடர் இலக்கம் | கடன் திட்டம் | 2018 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட மானியத்தொகை (ரூபா. மில்லியன்.) | 2018 ஆண்டில் வழங்கக் கூடிய கடன்களின் உச்சப் பெறுமதி (ரூபா. மில்லியன்) |
|---|---|---|---|
| 1 | சொந்துரு பியச | 1,000 | 14,000 |
| 2 | கொவி நவோதா | 50 | 350 |
| 3 | ரன் அஸ்வென்ன | 925 | 11,000 |
| 4 | ரிய சக்தி | 150 | 1,000 |
| 5 | ரிவி பல சவி | 1,500 | 22,000 |
| 6 | ஜய இசுர | 1,500 | 13,500 |
| 7 | திரி சவிய | 75 | 600 |
| 8 | மாத்ய அருண | 25 | 150 |
| 9 | பசுமைக் கடன் | 60 | 850 |
| 10 | எரம்பும | 25 | 200 |
| 11 | நடுத்தர வருமானம் பெறுவோருக்கான நவீன வீட்டுத் திட்டம் | 500 | 10,000 |
| | **தொகை** | **5,810** | **73,650** |

மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம்

### 2.2.2 வெளிநாட்டு உதவியின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் மீள் நிதிக் கடன் திட்டங்கள்

இ - நண்பர்கள் (E-friends - பவித்ர கங்கா) நிகழ்ச்சித் திட்டம், வீடுகளின் கூரை மீது பொருத்தப்படும் சூரிய சக்தி நிகழ்ச்சித் திட்டம், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான கடன் திட்டம், போன்ற வெளிநாட்டுக் கடன் திட்டங்கள் 03 "என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா" நிகழ்ச்சித் திட்டத்துக்குள் உள்ளடக்கப்படுகின்றன.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான கடன் திட்டம் 2016ஆம் ஆண்டில் நிதி அமைச்சினாலும், ஆசிய அபிவிருத்தி வங்கியினாலும் நடைமுறைமுறைப்படுத்தப்பட்டதோடு, பங்கேற்பு நிதி நிறுவனங்களின் ஊடாக இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு அதிக அளவிலான நிதித் தொகையை வழங்கும் நோக்குடன் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் முதலாவது தவணையாக ஐஅடொ 100 மில்லியன் வழங்கப்பட்டது. விஷேடமாக, முன்னர் வங்கிகள் மூலம் கடன்களைப் பெற்றுக் கொள்ளாத சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள், பெண்களின் தலைமையில் பராமரிக்கப்பட்டு வரும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள், கொழும்பு மாவட்டத்தில் அமைந்துள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் ஆகியனவற்றிற்கு கடன் வழங்குவதனை அதிகரிப்பதற்கான வெகுமதிகள் இக்கடன் திட்டத்தின் மூலம் வழங்கப்படுகின்றது.

அநேகமாக கடன் வழங்கல் நிகழ்ச்சிகள் சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, 2017ஆம் ஆண்டின் இறுதியில் மொத்தத் தவணையானது, கிட்டத்தட்ட 100 சதவீதத்துக்கு நெருங்கிய தொகையொன்று பங்கேற்பு நிதி நிறுவனங்களுக்கிடையில் விநியோகிக்கப்பட்டுள்ளதோடு, 2018 மார்ச் மாதமளவில் பூரணமாகப் பயன்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதன்படி, 2018 மார்ச் மாதம் 31ஆம் திகதியளவில் 1,611 பயனாளிகளுக்கிடையில் ரூபா. 14,186.40 மில்லியன் தொகை கடனாக வழங்கப்பட்டுள்ளது. நிதி நிறுவனங்களின் முன்னேற்றம் கீழே 2.3 அட்டவணையில் விளக்கப்பட்டுள்ளது.

| அட்டவணை 2.3 : 2018 மார்ச் மாதம் 31ஆம் திகதியில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் கடன் திட்டத்தின் முன்னேற்றம் | | | | |
|---|---|---|---|---|
| **பங்கேற்பு நிறுவனங்கள்** | **ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (ரூபா. மில்லியன்)** | **பகிர்வு** | | **பகிர்வின் சதவீதம்** |
| | | **கடன்களின் எண்ணிக்கை** | **கடன்களின் தொகை (ரூபா. மில்லியன்)** | |
| இலங்கை வங்கி | 1,280.32 | 204 | 1,201.82 | 93.9 |
| மக்கள் வங்கி | 1,280.32 | 117 | 858.27 | 67.0 |
| பிரதேச அபிவிருத்தி வங்கி | 1,280.32 | 472 | 1,164.42 | 90.9 |
| டீஎப்சீசீ வங்கி | 1,905.31 | 152 | 1,905.31 | 100.0 |
| சம்பத் வங்கி | 1,265.69 | 70 | 1,183.47 | 93.5 |
| ஹட்டன் நெஷனல் வங்கி | 1,905.31 | 156 | 1,905.31 | 100.0 |
| வர்த்தக வங்கி | 1,280.32 | 83 | 1,280.32 | 100.0 |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 3,102.15 | 261 | 3,007.84 | 97.0 |
| செலான் வங்கி | 639.62 | 40 | 639.62 | 100.0 |
| நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி | 1,280.32 | 56 | 1,040.02 | 81.2 |
| **மொத்தம்** | **15,219.68** | **1,611** | **14,186.40** | **93.21** |

மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம்

ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் 93 சதவீதம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதோடு, 15,000 இற்கும் மேற்பட்ட நேரடியானதும், மறைமுகமானதுமான வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. இன்னும் நிதிச் சந்தையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான கடனுக்கு இருக்கும் கேள்விக்கும், நிரம்பலுக்கும் இடையில் பாரிய ஒரு இடைவெளி காணப்படுவதனால் அநேகமான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் ஊழியர் செறிவைக் கொண்டிருப்பதனால் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் துறையில் அதிக அளவிலான வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.

இவ்விடயங்களைக் கருத்திற் கொண்டு அரசாங்கம் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டுள்ளதோடு, அதற்கிணங்க, ஆசிய அபிவிருத்தி வங்கி, 2018-2019 காலப்பகுதிக்கான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் கடன் திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கு ஐஅடொ 75 மில்லியன் மேலதிக ஒதுக்கீடொன்றை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது. அதன் படி, இந்த ஐஅடொ 75 மில்லியன் மேலதிக ஒதுக்கீடானது, ஐஅடொ 25 மில்லியனானது, 03 அரையாண்டு ஒதுக்கீடுகளாக இக்கடன் திட்டத்தின் முதலாம் கட்டத்தில் பங்கேற்ற பங்கேற்பு நிதி நிறுவனங்களின் ஊடாக விநியோகிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

நாட்டில் புத்துயிராக்கும் வலுவானது, இன்னும் சிசு மட்டத்திலேயே காணப்படுவதனால், எமது வலுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு நாம் பூரணமாக நிலக்கரி, பெற்றோலிய எண்ணெய், மற்றும் உயிர்வாயு என்பனவற்றின் மீதே தங்கியுள்ளோம். எமது தற்போதுள்ள கேள்விக்கு உயிர்ச்சுவட்டு எண்ணெய்யைத் தொடர்ந்து பயன்படுத்தினால், தற்போது உள்ள உயிர்ச்சுவட்டு எண்ணெய் ஒதுக்குகள் 30 வருடங்களுக்குப் போதியதாக இருக்கலாம். எனவே, எதிர்கால வலு நெருக்கடியை முகாமைத்துவம் செய்வதற்காக ஒரு தேசமென்ற வகையில் நாம் உயிர்ச்சுவட்டு எண்ணெய்யிலிருந்து, குறைந்த செலவும், மற்றும் சுற்றுச்சூழலுடன் நட்புறவான புத்துயிராக்கும் வலு மூலங்களுக்கும் நகர வேண்டியேற்பட்டுள்ளது. நிலப்பரப்பின் 35 பாகைக்குள்ளே அமைந்துள்ள “சூரியபாளம்” என்று அழைக்கப்படும் வலயத்தில் உள்ள ஒரு நாடு என்ற வகையில் இலங்கையில் சூரிய சக்தி உருவாக்கத்தின் மேம்பாட்டுக்கு அதிக அளவிலான சாத்தியப்பாடு காணப்படுகின்றது.

அதன் படி, வீடுகளில், வணக்கஸ்தலங்களில், ஹோட்டல்களில், வியாபார நிறுவனங்களில், மற்றும் கைத்தொழிற்சாலைகளின் கூரைகளின் மீது சூரிய சக்திப் பொறியைப் பொருத்துவதன் மூலம் இப்பொறியின் பயன்பாட்டினை மேம்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் “சூரிய பல சங்க்ராமய” எனும் அரசாங்கத்தின் தேசிய நிகழ்ச்சித் திட்டத்துக்கு வசதிகளை அளிப்பதற்கான கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் பேச்சு வார்த்தைகள் நடாத்தப்பட்டன. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் முதலாம் கட்டத்தில் ஐஅடொ 50 மில்லியனை வழங்குவதற்கும், மற்றும் 2018ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கும் 04 வருட காலப்பகுதியில் முன்னேற்றச் செயலாற்றுகையை அடிப்படையாகக் கொண்டு ஐஅடொ 200 மில்லியன் வரை அதிகரிப்பதன் மூலம் கூரையின் மீது பொருத்தப்படும் சூரிய சக்தி உருவாக்கல் கடன் நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்கனவே இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நான்கு வருட காலப்பகுதிக்குள் இக்கடன் திட்டத்தின் கீழ் சூரிய சக்திப் பிரிவில் ரூபா. 30,000 மில்லியன்களை முதலீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுவதோடு, இதன் மூலம் ஒப்பீட்டு ரீதியில் குறைந்த செலவு மற்றும் சுற்றுச் சூழலுக்கு நட்புறவான 200 மெ.வோ. அளவிலான சூரிய சக்தி, தேசிய மின் கட்டத்துக்கு சேர்த்துக் கொள்ளப்படும். மறுபுறம், தற்போது உயிர்ச்சுவட்டு எண்ணெய்யினை பயன்படுத்துவதன் மூலம் உருவாக்கப்படும் மின்சக்தி இக்கருத்திட்டத்தின் ஊடாக உருவாக்கப்படும் சூரிய சக்தியினால் பதிலீடாகப் பயன்படுத்தப்படுவதனால் மசகெண்ணெய்யை இறக்குமதி செய்வதற்கான செலவு குறைவடைவதனால் குறிப்பிடத்தக்க அளவிலான அந்நியச் செலாவணித் தொகையொன்றை சேமிக்கக் கூடியதாக உள்ளது.

நீர் மாசுபடல் என்பது, கைத்தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள், மற்றும் பொது மக்களின் மோசமான பழக்கவழக்கங்களின் மூலமும், மற்றும் தவறான நடவடிக்கைகளின் மூலமும் கழிவுகளை அகற்றுவதன் மூலம் ஏற்படும் பிரதான சுற்றுச் சூழல் பிரச்சனைகளில் ஒன்றாகும். கைத்தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள், மற்றும் அநேகமான கைத்தொழிலாளர்கள் குடி நீர் மூலங்களாகப் பயன்படுத்தும் ஆறுகள் மற்றும் மீன்பிடிக் கைத்தொழில் துறையுடன் இணைக்கப்பட்டுள்ள களப்புகள் தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சட்டங்களை மீறுவதன் மூலம் நேரடியாக அவர்களின் கழிவுப் பொருட்களை அகற்றுகின்றனர். அதன் படி, எமது அநேகமான நீர் மார்க்கங்களில் மாசின் மட்டம் முன்னெப்போதும் நிகழாதவாறு உயர்வடைந்துள்ளது. அதன் படி, எதிர் வரும் 05 வருட காலப்பகுதியில் கைத்தொழிற்சாலைகள் மற்றும் உல்லாச ஹோட்டல்களின் மூலம் ஆறுகள், களப்புக்கள், மற்றும் முகத்துவாரங்களுக்கு அகற்றப்படும் கழிவுகளின் அளவை பூச்சியப்படுத்தும் நோக்கத்துடன் ''ஈ-ப்ரெண்ட்ஸ்'' கருத்திட்டத்தின் கீழ் சலுகை அடிப்படையிலான நிதி உதவியை வழங்குவதன் மூலம் ''பவித்ர கங்கா'' நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

### 2.2.3 நிதியுதவியல்லாத நிகழ்ச்சித் திட்டங்கள்

நிதி மற்றும் நிதியல்லாத உதவிகளை உள்ளடக்கிய இரண்டு நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளன. அதாவது, தேசிய கடன் உத்தரவாத நிறுவனம் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிக் கம்பனிகளை (SME Companies) நிர்மாணித்தல் என்பனவாகும்.

வங்கித் துறையானது அதிக அளவில் பிணையங்களை அடிப்படையாகக் கொண்ட கடன் வழங்கலிலேயே அதிக அளவில் தங்கியிருப்பதனால், இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் கம்பனிகள் நிதி வசதிகளைப் பெற்றுக் கொள்வதில் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கின்றன. இன்னும் அநேகமான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் பிணையங்களை முன் வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் இதன் மூலம் கடினமான நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளன. அதாவது கடன் பெறுகை மற்றும் கடன் பெறுகையின் ஊடாக ஏற்படக் கூடிய வியாபார வளர்ச்சியைக் கைவிடல், உயர்வான வட்டி வீதத்தின் கீழ் கடன் வழங்குவோர் அல்லது கடன்களுடன் தொடர்பில்லாத அசைவற்ற சொத்துக்கள் அல்லது நகைகள் போன்றவற்றை பிணையங்களாக முன்வைத்தல் போன்றனவே அந்நெருக்கடிகளாகும். இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அநேகமான பொருளாதாரங்களில் உருவாக்கப்பட்டுள்ள பிரதான நிகழ்ச்சித் திட்டங்களாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு கடன் பிணைய முறைகளை உருவாக்குதலானது விளங்குகின்றது. இது சார்ந்த இடர்களை ஏற்றல், பகிர்ந்து கொள்ளல், பிணையங்களின் மீது தங்கியிருப்பதனை குறைத்தல் போன்ற இவ்வாறான முறைமைகள் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு போட்டித் தன்மை வாய்ந்த வட்டி வீதத்தின் கீழ் அதிக அளவிலான கடன்களை வழங்குவதற்கு இந்நிதி நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படும்.

அதன் படி, அரசாங்கத்தினால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் தேசிய உத்தரவாதக் கம்பனியொன்றை ஸ்தாபிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. இது தொடர்பான ஆரம்பப் பேச்சு வார்த்தைகள் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் மேற்கொள்ளப்பட்டதோடு, ஆசிய அபிவிருத்தி வங்கியினால் முன்மொழியப்பட்டுள்ள தேசிய உத்தரவாதக் கம்பனிக்கு ஐஅடொ 100 மில்லியனை அடிப்படை மூலதனமாக வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு ஒப்புரவாக கடன்களுக்கு உள்ள கேள்வி தொடர்பான ஆய்வு ஒன்றை மேற்கொள்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியினால் தொழில்நுட்ப உதவியொன்று வழங்கப்படுவதோடு, ஆய்வின் கண்டு பிடிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு முன் மொழியப்பட்ட தேசிய கடன் உத்தரவாத நிறுவனத்தின் நிலைபேறான தன்மையை விருத்தி செய்வதற்காக இந்நிறுவனம் கம்பனிச் சட்டத்தின் கீழ் அரச-தனியார் துறைகளின் பங்கேற்புடன் (Public Private Partnership) ஸ்தாபிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதே போல, அரசாங்கத்தினால், 2018 வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக இக்கருத்திட்டத்தின் சக தரப்பு நிதியாக ரூபா. 500 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2018 - 2020ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரசாங்கத்தினால் 50 புதிய விவசாய மற்றும் மீன்பிடிக் கைத்தொழில் நிறுவனங்கள், பெண்களுக்கு அதிக அளவில் உரித்துடைய 25 நிறுவனங்கள்,

இளைஞர்கள் மற்றும் யுவதிகளினால் ஆரம்பிக்கப்படும் 150 வியாபார நிறுவனங்களை ஸ்தாபிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வியாபாரங்கள் கம்பனிச் சட்டத்தின் கீழ் கம்பனிகளாகவோ அல்லது சட்ட ரீதியாக பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களாகவோ, விவசாய நிறுவனங்களாகவோ ஸ்தாபிக்கப்படவுள்ளன. குறைந்தது 10 பங்குதாரர்களைக் கொண்ட இக்கம்பனிகளுக்கு அல்லது ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமாக இருக்க வேண்டியதோடு, சகல பங்குதாரர்களும் கம்பனியின் ஆரம்ப மூலதனத்துக்குப் பங்களிப்புச் செலுத்துதல் வேண்டும். ஜேர்மன் சர்வதேச ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டம் (German International Cooperation – GIZ) இப்பணிக்கான ஆலோசகராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு, இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிறுவுவதற்கு எதிர்பார்க்கும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிக் கம்பனிகளுக்கு அந்நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் தொழில்நுட்ப உதவி வழங்கப்படும். இக்கம்பனிக்கு "என்டரபிரைஸ் ஸ்ரீலங்கா" கடன் திட்டத்தின் ஊடாக நன்கொடைகள் மற்றும் கடன்கள் உள்ளடங்கலாக விரிவான நிதியுதவிப் பொதியொன்றை வழங்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

### 2.2.4 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளின் நிதி ரீதியான முன்னேற்றம்

"என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரசாங்க தலையீட்டுடன் சலுகை அடிப்படையிலான வட்டி வீதத்தின் கீழ் நிதி மற்றும் நிதியல்லாத வசதிகளை வழங்குவதன் மூலம் நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் துறைக்கு ஆதரவளிக்கும் நோக்குடன் பதினைந்து (15) கடன் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அதற்கு மேலதிகமாக, சகல அரச மற்றும் தனியார் துறை வர்த்தக மற்றும் விசேட வங்கிகளினால் சந்தை வட்டி வீதத்துக்கு தமது நிதியைப் பயன்படுத்துவதன் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் கடன் திட்டங்கள் 60 இற்கு மேல் காணப்படுகின்றன. இவ்வனைத்துக் கடன் திட்டங்களும், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் துறைக்கு ஆதரவளிப்பதற்கு ஈடுபட்டிருப்பதனால், வங்கிகளுக்கிடையில் தனித்துவத்தினை அபிவிருத்தி செய்வதற்காக "என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா" நிகழ்ச்சித் திட்டம் எனப்படும் தொனியின் கீழ் இக்கடன் திட்டங்கள் அனைத்தையும் மேம்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2017ஆம் ஆண்டில், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அரச மற்றும் தனியார் வங்கிகளினால் இவ்வனைத்துக் கடன் திட்டங்களின் ஊடாக அண்ணளவாக ரூபா. 546,024 மில்லியன் தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்கள் கீழே அட்டவணை 2.4 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 2.4 : வர்த்தக மற்றும் அபிவிருத்தி வங்கிகளினால் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள் - 2017

| வங்கி | விவசாய | | சேவைகள் | | கைத்தொழில் | | ஏனைய | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கடன்களின் எண்ணிக்கை | மொத்தக் கடன் பெறுமதி (ரூபா. மில்லியன்) | கடன்களின் எண்ணிக்கை | மொத்தக் கடன் பெறுமதி (ரூபா. மில்லியன்) | கடன்களின் எண்ணிக்கை | மொத்தக் கடன் பெறுமதி (ரூபா. மில்லியன்) | கடன்களின் எண்ணிக்கை | மொத்தக் கடன் பெறுமதி (ரூபா. மில்லியன்) | கடன்களின் எண்ணிக்கை | மொத்தக் கடன் பெறுமதி (ரூபா. மில்லியன்) |
| இலங்கை வங்கி | 131 | 544 | 745 | 3,832 | 1,663 | 6,724 | 1,563 | 1,210 | 4,102 | 12,310 |
| மக்கள் வங்கி | 979 | 2,754 | 297 | 1,001 | 984 | 2,459 | 2,517 | 5,982 | 4,777 | 12,195 |
| பிரதேச அபிவிருத்தி வங்கி | 3,552 | 4,271 | 174 | 288 | 7,560 | 10,081 | 11,818 | 11,697 | 23,104 | 26,337 |
| லங்காபுத்ர வங்கி | 13 | 76 | 29 | 95 | 53 | 231 | 5 | 21 | 100 | 423 |
| சனச அபிவிருத்தி வங்கி | 116 | 89 | 6 | 4 | 1,622 | 1,319 | 9"131 | 7"398 | 10"875 | 8"810 |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 305 | 109 | 124 | 46 | 185 | 65 | 392 | 140 | 1"006 | 360 |
| டீஎப்சீசீ வங்கி | 309 | 3,321 | 1,561 | 10,929 | 1,178 | 8,762 | 172 | 654 | 3,220 | 23,666 |
| வர்த்தக வங்கி | 6,780 | 6,955 | 2,098 | 9,196 | 5,782 | 25,503 | 38,988 | 90,227 | 53,648 | 131",81 |
| சம்பத் வங்கி | 312 | 14,084 | 218 | 14,943 | 551 | 31,151 | 1,419 | 75,618 | 2,500 | 135,797 |
| செலான் வங்கி | 595 | 6,364 | 670 | 6,449 | 1,275 | 10,112 | 2,699 | 12,856 | 5,239 | 35,781 |
| ஹட்டன் நெஷனல் வங்கி | 3,668 | 13,590 | 5,345 | 28,100 | 6,741 | 32,600 | 12,665 | 62100 | 28,419 | 136,390 |
| நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி | 113 | 1,213 | 23 | 338 | 348 | 2,242 | 952 | 7,449 | 1,436 | 11,242 |
| ஸ்டேன்டாட் சார்டட் வங்கி | 1 | 46 | 42 | 503 | 46 | 395 | 1 | 2 | 90 | 946 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பேன் ஏசியா வங்கி | 197 | 594 | 96 | 384 | 1,773 | 7,934 | 902 | 974 | 2,968 | 9,886 |
| **மொத்தம்** | **17,071** | **54,010** | **11,428** | **76,108** | **29,761** | **139,578** | **83,224** | **276,328** | **141,484** | **546,024** |

மூலம்: குறிப்பிட்ட வங்கிகள்

2017ஆம் ஆண்டில் அரச மற்றும் தனியார் துறைகளில் வர்த்தக மற்றும் அபிவிருத்தி வங்கிகளினால் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் துறைக்கு வழங்கப்பட்டுள்ள மொத்தக் கடன் தொகையில் 12 சதவீதம் விவசாயத் துறைக்கும், 21 சதவீதம் கைத்தொழில் துறைக்கும், 8 சதவீதம் சேவைகள் துறைக்கும், வழங்கப்பட்டுள்ளதோடு, 59 சதவீதம் ஏனைய அனைத்து துறைகளுடனும் தொடர்புடைய சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் துறைக்குக் கடன் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. கீழே வரைபு 1 இன் மூலம் இந்த நிலைமையானது தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது.

### 2.2.5 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - ஜேர்மனின் ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டம்

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் ஜேர்மனின் ஒத்துழைப்பு நிறுவனத்தின் (GIZ) ஊடாக நடைமுறைப்படுத்துவதற்காக 2.785 யூரோ மில்லியன் நன்கொடை உதவியொன்றை வழங்குவதன் மூலம் ஜேர்மன் அரசாங்கத்திற்கும், இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையொன்று 2012ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்டது. கருத்திட்டக் காலப்பகுதி “சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - II” என அதன் இரண்டாம் கட்டமாக 2018 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டதோடு, ஜேர்மனின் நன்கொடையாக மேலதிக யூரோ 3 மில்லியன் ஒதுக்கீடு ஒன்று வழங்கப்பட்டதோடு, 2018 இல் இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ள வேண்டிய செலவுகளுக்காக 2018 வரவு செலவுத் திட்டத்தில் ரூபா. 20 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முன்னேற்ற அறிக்கையின் படி, 2017 ஆம் ஆண்டில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் துறையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ரூபா. 286 மில்லியன் தொகை ஜேர்மன் சரவதேச ஒத்துழைப்பு நிறுவனம் செலவு செய்துள்ளது.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் 2 ஆம் கட்டத்தின் இலக்கு, இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களிலும் மற்றும் ஏனைய இரண்டாந்தர அபிவிருத்திப் பிரதேசங்களிலும் அமைந்துள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளின் போட்டித் தன்மை, சகல தரப்பினரினதும் உள்ளடக்கத்தன்மை, சுற்றுச் சூழலின் நிலைபேறான தன்மை, ஆகியனவற்றை அதிகரிப்பதாகும். இந்நிகழ்ச்சித் திட்டத்தின் நடவடிக்கைகள் நான்கு பிரதான துறைகளை உள்ளடக்கியுள்ளது.

1) கொள்கை மற்றும் நிறுவன ரீதியான சட்டக நிபந்தனைகள்
2) நிதிக்கான அணுகல்
3) தொழில்நுட்பத்திற்கும், சந்தைகளுக்குமான அணுகல்
4) புத்தாக்கங்களும், தொழில்முயற்சியும்

## 2.3 நுண்நிதி

நாட்டின் கிராமியப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதில் நுண்நிதியானது மகத்தான பங்கை வகிக்கின்றது. இங்கு வறிய மக்கள் மற்றும் சமூகத்தில் ஓரங்கட்டப்பட்ட நபர்களுக்கு மிகச் சிறந்த ஒரு சுற்றுச் சூழலை உருவாக்குவதற்காக அரசாங்கம் பிரதான ஒரு பங்களிப்பை மேற்கொள்கின்றது. இவ்வாறு வறிய மக்களின் சமூக மற்றும் பொருளாதார மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்காக அநேகமான நாடுகள் மற்றும் அபிவிருத்தி நிறுவனங்கள் நுண் நிதியை ஒரு கருவியாகப் பயன்படுத்துகின்றது. நுண்நிதியானது கிராமியத் துறையின் வளர்ச்சிக்குப் பங்களிப்பினைச் செலுத்துவதனால், இலங்கையில், நுண்நிதித் துறையானது இலங்கையின் கிராமிய சமூகத்தின் வறுமையைக் குறைப்பதற்கான வினைத்திறனான சாதனமாக இருந்து வந்துள்ளது.

கடந்த பத்தாண்டுகளாக, நுண் நிதியானது சேமிப்புச் சங்கங்கள், சுழலும் சேமிப்புச் சங்கங்கள், கடன் வழங்கும் நிறுவனங்கள், சவ அடக்கங்கள் மற்றும் மரண நன்மைச் சங்கங்கள் நகர மற்றும் கிராமிய சமூக மட்டம் போன்ற வடிவங்களில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. இவ்வாறான நுண் நிதி நிறுவனங்களினால் முறையான வங்கி முறைமைகளின் மூலம் புறக்கணிக்கப்பட்ட குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கான கடன்கள், சேமிப்புக்கள், காப்புறுதி வருவாய்கள், நிதியல்லாத சேவைகள், போன்ற சேவைகள் வழங்கப்படுகின்றன. நுண்நிதி நிறுவனங்களினால் வழங்கப்படும் இவ்வாறான சேவைகள் பிரதானமாக குறைந்த வருமானமுள்ள தனிப்பட்டவர்கள், குடும்பங்கள் மற்றும் சிறிய

அளவிலான உள்ளூர் தொழில்முயற்சிகள் ஆகியனவற்றின் தேவைகளை மாத்திரமல்லாது அவர்களின் வருமானங்கள் மற்றும் இயலளவுகளை இலக்காகக் கொண்டு வழங்கப்படுகின்றது.

பல்வேறு வகைப்பட்ட நுண்நிதி நிறுவனங்களைக் கண்காணிக்கும் பொறுப்பு பல்வேறு அதிகார சபைகளுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தாலும் கூட, எந்த விதமான கண்காணிப்புக்களோ அல்லது ஒழுங்கு முறை நிறுவனங்களுக்கோ அல்லது நிறுவனமொன்றுக்கோ உட்படாத நுண்நிதி நிறுவனங்கள் பல காணப்படுகின்றன. ஆயினும், நுண்நிதித் துறையின் நோக்கங்களையும், மற்றும் அவற்றிற்கு வழங்கும் முன்னுரிமைகளையும் அடிப்படையாகக் கொண்டு நுண்நிதி நிறுவனங்களின் செயற்பாடுகளும், மற்றும் நிதிச் செயலாற்றுகைகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

அதன் படி, 2016ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நுண் நிதிச் சட்டத்தின் மூலம் இது வரை ஒழுங்கு முறைப்படுத்தப்படாத நுண் நிதி நிறுவனங்களை உள்ளடக்குவதற்கான ஒழுங்குமுறைச் சட்டகமொன்றை வழங்கும் நோக்கத்துடன் 2016 ஜூலை மாதம் 15 ஆம் திகதியிலிருந்து அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. குறைந்த வருமானம் பெறுவோருக்கு நுண் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், விருத்தி செய்தல், நிதி உள்ளடக்கத்தை உயர்வடையச் செய்தல், நிதி நிறுவனங்களின் வலுத்தன்மை மற்றும் முறைமைகளை வலுப்படுத்தல், விரிவான நிதி மூலங்களுக்கான அணுகலுக்கு நுண்நிதி நிறுவனங்களுக்கு வசதியளித்தல், நுகர்வோர் பாதுகாப்பை மேம்படுத்தல், பாதுகாப்பான நிலையான நிதி முறைமை ஒன்றை மேம்படுத்துவதுமே இச்சட்டத்தின் பிரதான நோக்கங்களாகும். இச்சட்டத்தின் மூலம் நுண்நிதி வியாபாரங்களில் ஈடுபட்டுள்ள கம்பனிகளுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கும், அக்கம்பனிகளுக்கு சட்டங்களையும். ஒழுங்கு விதிகளையும் விதித்தல் மற்றும் நுண் நிதிக் கடன்கள், அரச சார்பற்ற நிறுவனங்களைக் கண்காணித்தல், தன்னார்வாளர் சமூக சேவை நிறுவனங்களின் பதிவாளருக்கு வழிகாட்டல்களை வழங்குதல் ஆகியனவற்றை மேற்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

2017ஆம் ஆண்டில் நுண் நிதி நிறுவனங்களுக்கு அனுமதிப் பத்திங்களைப் பெற்றுக் கொள்வதற்காக 11 விண்ணப்பப் படிவங்கள் இலங்கை மத்திய வங்கிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மேலும் 2017ஆம் ஆண்டில், இலங்கை மத்திய வங்கியின் நுண்நிதிக் கடன் அரச சார்பற்ற நிறுவனங்களைக் கண்காணிப்பதற்காக தன்னார்வாளர் சமூக சேவைகள் பதிவாளரால் குறிப்பிட்ட வர்த்தமானிப் பத்திரிகை வெளியிடப்படல் வேண்டும். நுண்நிதிச் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப, அனுமதிப் பத்திரங்களை உடைய நுண்நிதிக் கம்பனியொன்று அல்லது பதிவு செய்துள்ள நுண்நிதி அரச சார்பற்ற நிறுவனமொன்றைத் தவிர எந்த ஒரு நிறுவனமும் நுண்நிதி வியாபாரங்களில் ஈடுபட முடியாது. இதற்காக வழங்கப்பட்டுள்ள இடைநிலைக் காலப்பகுதி 2018 ஜனவரி மாதம் 14ஆம் திகதியில் முடிவடைகின்றது.

குறைந்த வருமானமுடைய குடும்பங்களை இலக்காகக் கொண்டு அரசாங்கத்தின் அனுசரணையுடன் நுண்நிதி நிகழ்ச்சித் திட்டங்கள் பல 2017ஆம் ஆண்டிலும் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு, அந்நுண்நிதி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் 12.5ஆம் அட்டவணையில் காட்டப்படுள்ளது.

**அட்டவணை 2.5 : பிரதான நுண்நிதி நிறுவனங்களின் முன்னேற்றம் - 2017**


| நுண்நிதி நிறுவனம் | கிளைகளின் எண்ணிக்கை | வைப்பாளர்களின் எண்ணிக்கை | கடன்பட்டோரின் எண்ணிக்கை | மொத்த வைப்புக்களின் அளவு (ரூபா. மில்லியன்) | மொத்த முதலீடு (ரூபா. மில்லியன்) | கடனின் அளவு (ரூபா. மில்லியன்) |
|---|---|---|---|---|---|---|
| திவிநெகும சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட வங்கி | 1,074 | 14,060,141 | 1,314,357 | 87,407 | 78,068 | 54,547 |
| கூட்டுறவுக் கிராமிய வங்கி | 2,258 | 9,868,445 | 1,347,237 | 113,387 | 111,287 | 75,281 |
| கமநல வங்கி | 551 | 697,977 | 630,806 | 680 | 2,319 | 1,452 |
| பிரதேச அபிவிருத்தி வங்கி | 268 | 6,263,479 | 576,293 | 136,582 | 36,430 | 128,343 |
| லங்காபுத்ர வங்கி | 8 | 64,530 | 8,899 | 375 | 5,361 | 3,965 |
| **மொத்தம்** | **4,151** | **30,954,572** | **3,877,592** | **338,431** | **228,104** | **263,588** |

மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம்

நுண் நிதி நறுவனங்களினால் கடன்கள் மற்றும் வைப்புக்கள் என்ற வகையில் நிதி வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றது. அதன் படி, 2017ஆம் ஆண்டின் இறுதியில் பிரதான நுண்நிதி

நிறுவனங்களினால் நுண்நிதித் துறைக்கு வழங்கப்பட்டுள்ள மொத்தக் கடனின் அளவு ரூபா. 263 பில்லியன்களாக இருந்ததோடு, அதில் 49 சதவீதம் பிரதேச அபிவிருத்தி வங்கிகளினாலும் 28 சதவீதம் (ரூபா. 75 பில்லியன்) கூட்டுறவுக் கிராமிய வங்கிகளினாலும், 20 சதவீதம் (ரூபா. 54 பில்லியன்) திவிநெகும சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட வங்கிகளாலும் வழங்கப்பட்டிருந்தன. 2017ஆம் ஆண்டின் இறுதியில் குறைந்த வருமானம் பெறுவோரின் சேமிப்புக்கள் ரூபா. 338 பில்லியன் வரை அதிகரித்திருந்ததோடு, அத்தொகையில் ரூபா. 228 பில்லியன் நீண்ட மற்றும் குறுகிய கால முதலீடுகளில் இடப்பட்டுள்ளன.

வரைபு 2.1 : முறையான வங்கிகளினால் நுண்நிதித் துறைக்கு பகிரப்பட்ட கடன் பகிர்வுகள் - 2017




2017ஆம் ஆண்டில், வர்த்தக வங்கிகளினால் நுண் நிதித் துறைக்கு வழங்கப்பட்டுள்ள மொத்தக் கடன் ரூபா. 165 பில்லியனாக இருந்ததோடு, அதில் ரூபா. 87 பில்லியன் சம்பத் வங்கியினால் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான கடன் திட்டம், ஜய இசுர, புதிய முழுமையான கிராமிய கடன் திட்டம் (சருசார), வறுமையை ஒழிப்பதற்கான நுண் நிதிக் கருத்திட்டம், மற்றும் சௌபாக்ய எனும் கடன் திட்டத்தின் ஊடாக சிறிய அளவிலான கடன்களை வழங்கியுள்ளது. பிரதேச அபிவிருத்தி வங்கியும், மற்றும் மக்கள் வங்கியும் 2017ஆம் ஆண்டில் முறையே ரூபா. 44 பில்லியனையும், ரூபா. 75 பில்லியனையும் நுண்நிதித் துறைக்குக் கடனாக வழங்கியுள்ளன. அரச வங்கிகளுடன் ஒப்பிடுகையில் தனியார் வங்கிகளும் பல்வேறு நுண்நிதிக் கடன் திட்டங்களின் ஊடாக கடன்களை வழங்கியுள்ளதோடு, அதில் ஹட்டன் நெஷனல் வங்கி, சனச அபிவிருத்தி வங்கி மற்றும் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி என்பன முன்னணி வகிக்கின்றன.

## 2.4 விவசாயம்

### 2.4.1 நெல் விவசாயிகளுக்கான உர மானியத்துக்கான காசு மானியம்

உரத்திற்கான காசு மானிய நிகழ்ச்சித் திட்டமானது, அரசாங்கத்தினால் 2016 சிறு போகத்திலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டதோடு, அதன் படி, நெல் விவசாயி ஒருவருக்கு ஒரு வருடத்திற்கு ஒரு ஹெக்டேயருக்கு ரூபா. 25,000/- வீதம் கூடியது 2 ஹெக்டேயர்கள் வரை காசு மானியமொன்று வழங்கப்பட்டது. இரண்டு ஹெக்டேயர்கள் உடைய சிறிய அளவிலான நெல் விவசாயி ஒருவர் வருடாந்தம் ரூபா. 50,000/- காசு மானியமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு தகுதியைப் பெற்றுக் கொள்வதோடு, அவர்களுக்கு உரித்தான மானியம் ஒவ்வொரு வருடத்திலும் இரண்டு போகங்களுக்கும் வெவ்வேறாக வழங்கப்படும்.

நாடு பூராகவும் உள்ள அரச துறை அல்லது தனியார் துறையில் உர விற்பனை நிலையங்களின் மூலம் நெல் விவசாயிகள் இரசாயன உரத்தினை அல்லது சேதன உரத்தினைக் கொள்வனவு செய்வதற்காக இக்காசு மானியத்தினை பயன்படுத்துவதற்கான சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இப்புதிய கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் நெல் விவசாயிகள் பயன்படுத்தும் பிரதான மூன்று உர வகைகளான யூரியா, ட்ரிபல் சுப்பர் பொஸ்பேட் (டீஎஸ்பீ) மற்றும் மியுரேட் ஒப் பொட்டே, (எம்ஓபீ) ஆகியனவற்றிகு ரூபா. 2,500/- உச்ச சில்லறை விலையொன்று பிரகடனப்படுத்தப்பட்டது. இக்காசு மானியம் குறிப்பிட்ட நெல் விவசாயியின் வங்கிக் கணக்கிற்கு வரவு வைக்கப்படுவதோடு, இத்தகவல்கள் விவசாய அமைச்சின் இணையத் தளத்திலும் வெளியிடப்படும்.

உரத்திற்கான காசு மானியத்தினை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2016/17 பெரும் போகத்திலும் 2017 சிறு போகத்திலும் நெல் விவசாயிகளுக்கு ரூபா. 10.3 பில்லியன் காசு மானியம் வழங்கப்பட்டது. பின்வரும் 2.6 அட்டவணையில் மேலதிக விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.6 : நெல்லுக்கான உர மானியம் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றம்**

| மாவட்டம் | 2016/17 பெரும் போகம் | | | 2017 சிறு போகம் | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | உரத்தைப் பெற்றுக் கொண்ட விவசாயிகளின் எண்ணிக்கை | பயிரிடப்பட்ட நிலப்பரப்பு (ஹெக்.) | செலுத்தப்பட்ட மானியத் தொகை (ரூபா.) | உரத்தைப் பெற்றுக் கொண்ட விவசாயிகளின் எண்ணிக்கை | பயிரிடப்பட்ட நிலப்பரப்பு (ஹெக்.) | செலுத்தப்பட்ட மானியத் தொகை (ரூபா.) | உரத்தைப் பெற்றுக் கொண்ட விவசாயிகளின் எண்ணிக்கை | பயிரிடப்பட்ட நிலப்பரப்பு (ஹெக்.) | செலுத்தப்பட்ட மானியத் தொகை (ரூபா.) |
| கொழும்பு | 4,660 | 1,753 | 22,413,750 | 5,469 | 816 | 10,473,750 | 10,129 | 2,569 | 32,887,500 |
| கம்பஹா | 14,025 | 5,331 | 70,710,000 | 7,267 | 3,118 | 40,860,000 | 21,292 | 8,449 | 111,570,000 |
| களுத்துரை | 14,096 | 5,226 | 65,743,500 | 14,822 | 5,920 | 75,200,500 | 28,918 | 11,146 | 140,944,000 |
| கண்டி | 26,256 | 10,968 | 140,218,750 | 29,788 | 9,805 | 125,035,000 | 56,044 | 20,773 | 265,253,750 |
| மாத்தளை | 29,965 | 14,593 | 185,515,000 | 22,236 | 9,543 | 121,728,750 | 52,201 | 24,136 | 307,243,750 |
| நுவரெலியா | 14,145 | 5,569 | 62,492,470 | 11,587 | 4,620 | 58,047,500 | 25,732 | 10,189 | 120,539,970 |
| காலி | 11,077 | 4,324 | 54,750,750 | 12,323 | 5,239 | 66,603,750 | 23,400 | 9,563 | 121,354,500 |
| மாத்தறை | 15,934 | 6,572 | 85,536,350 | 29,157 | 11,248 | 146,481,250 | 45,091 | 17,819 | 232,017,600 |
| அம்பாந்தோட்டை | 43,057 | 34,039 | 301,867,500 | 33,625 | 25,541 | 320,178,750 | 76,682 | 59,580 | 622,046,250 |
| யாழ்ப்பாணம் | 16,295 | 9,092 | 121,509,900 | 6,759 | 2,744 | 37,672,500 | 23,054 | 11,836 | 159,182,400 |
| மன்னார் | 14,788 | 17,286 | 216,070,000 | 258 | 149 | 1,517,500 | 15,046 | 17,435 | 217,587,500 |
| வவுனியா | 17,551 | 18,273 | 226,838,250 | 813 | 511 | 6,381,250 | 18,364 | 18,784 | 233,219,500 |
| முல்லைத்தீவு | 12,851 | 15,587 | 194,841,250 | 1,124 | 899 | 11,241,250 | 13,975 | 16,487 | 206,082,500 |
| கிளிநொச்சி | 15,337 | 21,150 | 264,373,750 | 2,519 | 1,620 | 20,243,750 | 17,856 | 22,769 | 284,617,500 |
| மட்டக்களப்பு | 36,498 | 44,261 | 553,256,250 | 18,582 | 23,415 | 292,687,250 | 55,080 | 67,675 | 845,943,500 |
| அம்பாறை | 74,630 | 75,438 | 942,976,250 | 46,798 | 41,148 | 514,353,750 | 121,428 | 116,586 | 1,457,330,000 |
| திருகோணமலை | 40,729 | 37,288 | 466,095"000 | 21,472 | 9,864 | 123,305,000 | 62,201 | 47,152 | 589,400,000 |
| குருநாகலை | 115,598 | 40,092 | 510,102,450 | 108,201 | 17,845 | 228,932,500 | 223,799 | 57,937 | 739,034,950 |
| புத்தளம் | 19,605 | 15,204 | 190,403,230 | 3,259 | 2,236 | 28,435,625 | 22,864 | 17,440 | 218,838,855 |
| அனுராதபுரம் | 116,561 | 50,973 | 637,257,500 | 35,432 | 25,057 | 312,967,500 | 151,993 | 76,031 | 950,225,000 |
| பொலன்னறுவை | 66,717 | 63,674 | 709,380,125 | 57,439 | 39,160 | 489,307,750 | 124,156 | 102,834 | 1,198,687,875 |
| பதுளை | 48,324 | 25,044 | 315,187,250 | 50,574 | 13,881 | 177,181,250 | 98,898 | 38,924 | 492,368,500 |
| மொனராகலை | 47,313 | 30,117 | 351,599,500 | 16,533 | 10,059 | 125"883,750 | 63,846 | 40,176 | 477,483,250 |
| இரத்தினபுரி | 19,376 | 9,382 | 118,693,750 | 15,824 | 7,324 | 92,730,000 | 35,200 | 16,705 | 211,423,750 |
| கேகாலை | 11,149 | 3,142 | 43,445,000 | 7,070 | 1,832 | 25,616,250 | 18,219 | 4,974 | 69,061,250 |
| **மொத்தம்** | **846,537** | **564,377** | **6,851,277,525** | **558,931** | **273,594** | **3,453,066,125** | **1,405,468** | **837,971** | **10,304,343,650** |

மூலம்: விவசாய அமைச்சு

## 2.4.2 நெல் தவிர்ந்த ஏனைய பயிர்களுக்கான உர காசு மானியத்தை வழங்கல்

சிறிய அளவிலான விவசாயிகளுக்கான வெகுமதியாக நெல் தவிர்ந்த ஏனைய பயிர்களின் உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கான வெகுமதியொன்றாகவும், மற்றும் அவற்றின் உற்பத்தித் திறனை விருத்தி செய்யும் நோக்குடனும் அரசாங்கத்தினால் பெருந்தோட்டத் துறை சிறு உடமையாளர்களுக்கும் மற்றும் சோளம், சோயா உருளைக் கிழங்கு, பெரிய வெங்காயம், மற்றம் மிளகாய் போன்ற பயிர்களைப் பயிரிடும் சிறிய அளவிலான விவசாயிகளுக்கும் உரத்திற்கான காசு மானியம் வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அரசாங்கத்தின் கொள்கையின் முன்னெடுப்பொன்றான "உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டத்துக்கு" ஏற்ப மேலே குறிப்பிடப்பட்ட ஐந்து பயிர்களும் இனங்காணப்பட்டுள்ளது. நெல்லைத் தவிர ஏனைய பயிர்களுக்கு தற்போது வழங்கப்படும் வருடாந்த உர மானிய வீதங்கள் அட்டவணை 2.7 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.7 : நெல் தவிர்ந்த ஏனைய பயிர்களுக்கான உர மானிய நிதியின் அளவு**

| பயிர்கள் | உரத்துக்கான காசு மானியத்தைப் பெற்றுக் கொள்வதற்கான தகுதியைப் பெறுவதற்கான நிலப்பரப்பின் உச்ச அளவு (ஹெக்டேயர்) | வருடாந்தம் செலுத்தப்படும் காசு மானியம் (ரூபா.) |
|---|---|---|
| தேயிலை | 01 | 15,000 |
| இறப்பர் | 02 | 5,000 |
| உருளைக் கிழங்கு | 02 | 9,000 |
| சோளம், சோயா, உருளைக் கிழங்கு, பெரிய வெங்காயம், மற்றும் மிளகாய் | 01 | 10,000 |

மூலம்: விவசாய அமைச்சு மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு

2017ஆம் ஆண்டில் சுமார் 351,885 பெருந்தோட்டத்துறை சிறு உடைமையாளர்கள் காசு மானியத்தைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

| அட்டவணை 2.8 : பெருந்தோட்டப் பயிர்களுக்கான உர காசு மானிய வழங்கலின் முன்னேற்றம் | | | |
|---|---|---|---|
| பெருந்தோட்டப் பயிர்கள் | பயனாளிகளின் எண்ணிக்கை | பயிரிடப்பட்ட நிலப்பரப்பு (ஹெக்டேயர்) | செலுத்தப்பட்ட காசு மானியம் (ரூபா. மில்லியன்) |
| தேயிலை | 139,211 | 59,304 | 886 |
| இறப்பர் | 41,819 | 19,110 | 95 |
| தெங்கு | 170,855 | 53,571 | 480 |
| **மொத்தம்** | **351,885** | **131,986** | **1,461** |
| மூலம்: பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு | | | |

2017ஆம் ஆண்டில் சுமார் 89,603 சோளம், சோயா, உருளைக் கிழங்கு, பெரிய வெங்காயம், மற்றும் மிளகாய் பயிரிடும் சிறிய அளவிலான விவசாயிகள் இவ்வாறு காசு மானியத்தைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

| அட்டவணை 2.9 : ஏனைய பயிர்களுக்கான உர மானிய காசு வழங்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றம் | | | |
|---|---|---|---|
| மாகாணம் | உரத்தைப் பெற்றுக் கொண்ட விவசாயிகளின் எண்ணிக்கை | பயிரிடப்பட்ட நிலப்பரப்பு (ஹெக்டேயர்) | செலுத்தப்பட்ட காசு மானியம் (ரூபா. மில்லியன்) |
| மேல் மாகாணம் | - | - | - |
| மத்திய மாகாணம் | 2,852 | 941.63 | 9,482,000 |
| தென் மாகாணம் | 452 | 158.45 | 1,586,000 |
| வட மேல் மாகாணம் | 1,613 | 915.45 | 9,155,000 |
| வட மாகாணம் | 26,022 | 19,075.00 | 190,754,000 |
| ஊவா மாகாணம் | 37,531 | 28,040.00 | 280,600,000 |
| சப்ரகமுவா மாகாணம் | 179 | 63.00 | 627,000 |
| கிழக்கு மாகாணம் | 7,200 | 5,756.00 | 56,808,074 |
| வட மாகாணம் | 13,754 | 4,485.00 | 48,349,000 |
| **மொத்தம்** | **89,603** | **59,434.53** | **597,361,074** |
| மூலம்: விவசாய அமைச்சு | | | |

### 2.4.3 புதிய முழுமையான கிராமியக் கடன் திட்டம்

விவசாயத் துறைக்கு கடன் வசதிகளை வழங்குவதன் மூலம் கிராமியத் துறையின் உற்பத்திகளை ஊக்குவிப்பதன் மூலம் அம்மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்குடன் நெல் மற்றும் ஏனைய பயிர்களை பயிரிடுவதற்கேற்ற வகையில் அவ்விவசாயிகளுக்கு கடன் வழங்குவதற்காக இலங்கை மத்திய வங்கியினால் வர்த்தக வங்கிகளின் ஊடாக புதிய முழுமையான கிராமிய கடன் திட்டம் 2017ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இக்கடன் திட்டத்தின் கீழ் வர்த்தக வங்கிகள் தமது நிதியைப் பயன்படுத்துவதன் மூலம் நெல், மிளகாய், வெங்காயம், சோளம், உருளைக் கிழங்கு, இஞ்சி, மரக்கறி வகைகள் உள்ளடங்கலாக 32 பயிர் வகைகளுக்கு கடன் வழங்கப்படுகின்றது. புதிய முழுமையான கடன் திட்டமானது வறுமையை ஒழித்தல், கிராமிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் மகத்தான பங்கை வகித்துள்ளது. அதன்படி, விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக விவசாயிகளுக்கு 7 சதவீத வட்டி வீதத்துக்குக் கடன் வழங்கப்படுவதோடு, அதற்கு 5 சதவீத வட்டி மானியமொன்றும் அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்றது.

| அட்டவணை 2.10 : புதிய முழுமையான கிராமிய கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பயிர்களுக்கான கடன்களின் மொத்த முன்னேற்றம் 2013 - 2017 | | | | | |
|---|---|---|---|---|---|
| விபரங்கள் | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
| விடுவிக்கப்பட்ட கடன்களின் பெறுமதி (ரூபா. மில்லியன்) | 8,189 | 6,750 | 7,138 | 8,009 | 7,846 |
| பயிரிடப்பட்ட நிலப்பரப்பின் அளவு (ஏக்கர்கள்) | 279,521 | 240,921 | 265,719 | 274,997 | 236,139 |
| பயனாளிகளின் எண்ணிக்கை | 96,381 | 86,143 | 90,533 | 87,060 | 71,397 |
| மூலம்: பிராந்திய அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி | | | | | |

2017ஆம் ஆண்டில பங்கேற்பு நிதி நிறுவனங்கள் தமது சொந்த நிதியைப் பயன்படுத்துவதன் மூலம் இக்கடன் திட்டத்தின் கீழ் கடன் வழங்கியதோடு, அதற்காக அரசாங்கத்தினால் ரூபா. 219 மில்லியன் வட்டி மானியமாக செலுத்தப்பட்டுள்ளது. புதிய முழுமையான கிராமிய கடன் திட்டத்தின் மூலம் 2017ஆம் ஆண்டிற்குள் 71,397 பயனாளிகளுக்கு ரூபா. 7,846 மில்லியன் தொகையைக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. கடந்த 5 வருட காலப்பகுதியில் இக்கடன் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட கடனின் அளவு வேறுபட்டாலும் கூட, ஒரு வருடத்திற்கு ரூபா. 8 பில்லியன் கடன் விடுவிக்கப்பட்டுள்ளது. புதிய முழுமையான கிராமிய கடன் திட்டத்தின் கீழ் பயனடைந்தவர்களின் எண்ணிக்கையை 2016ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2017ஆம் ஆண்டில் 87,060 இலிருந்து 71,397

வரை குறைவடைந்துள்ளதோடு, கடன் வழங்கல்கள் ரூபா. 8,009 மில்லியனிலிருந்து ரூபா. 7,845 வரை குறைவடைந்துள்ளது. அதற்கமைய கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் கடனுக்கான கேள்வியானது 18 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. 2017ஆம் ஆண்டில், நாட்டில் நிலவிய மோசமான காலநிலை மற்றும் சுற்றுச் சூழலின் தாக்கமே இக்கடனுக்கான கேள்வி குறைவடைந்தமைக்குப் பிரதானமான காரணமாகும்.

வழங்கப்பட்டுள்ள கடனின் அளவிற்கேற்ப, கூடியது ஒரு ஏக்கருக்கு ரூபா. 320,000க்கு உட்பட்டு நெல் விவசாயிகளுக்கு அதிக அளவிலான கடன் தொகையொன்று விடுவிக்கப்பட்டுள்ளதோடு, அது 2017ஆம் ஆண்டில் பகிரப்பட்ட கடன் தொகையில் 65 சதவீதமாகும். 2017ஆம் ஆண்டில், இக்கடன் வசதியளிப்பின் கீழ் 236,139 ஏக்கர்களில் விவசாயப் பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளதோடு, அதில் 76 சதவீதம் நெற் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.


**அட்டவணை 2.11 : புதிய முழுமையான கிராமிய கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் - 2017**

| பயிர்கள் | ஒரு ஏக்கருக்கு வழங்கப்படும் கடனின் உச்ச எல்லை (ரூபா) | உச்ச நிலப்பிரிவுகள் (ஏக்கர்) | வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட கடன் தொகை (ரூபா. மில்லியன்) | நிலப்பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|---|---|---|
| நெல் - நீர்ப்பாசன | 30,000 | 10 | 46,135 | 4,743 | 178,770 |
| மழை ஊட்டி | 32,000 | 10 | | | |
| சோளம் | 34,000 | 10 | 10,395 | 1,062 | 36,497 |
| உருளைக் கிழங்கு | 252,000 | 2 | 3,358 | 724 | 3,529 |
| வெங்காயம் | 140,000 | 2 | 3,541 | 556 | 5,281 |
| மிளகாய் | 88,000 | 2 | 2,055 | 155 | 2,236 |
| மரக்கறி | 31,000-119,000 | 2 | 4,788 | 531 | 7,617 |
| ஏனைய - இஞ்சி | 70,000 | 2 | 1,125 | 75 | 2,210 |
| **மொத்தம்** | | | **71,397** | **7,846** | **236,139** |

மூலம்: பிராந்திய அபிவிருத்தித் திணைக்களம் , இலங்கை மத்திய வங்கி


2017ஆம் ஆண்டில், வழங்கப்பட்டுள்ள மொத்தக் கடனின் அளவும் பயனாளிகளின் பிராந்தியப் பரவலையும் எடுத்துக் கொண்டால், கூடுதலான கடன் தொகையான ரூபா. 976.81 மில்லியனைப் பெற்றுக் கொண்ட 7,528 பயனாளிகளைக் கொண்ட மாவட்டமாக அம்பாறை மாவட்டம் பதிவு செய்யப்பட்டுள்ளது. (வரைபடம் 2.2). அதே போல, ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் அனுராதபுரம், பொலன்னறுவை, அம்பாந்தோட்டை, ஆகிய மாவட்டங்களிலும் இக்கடன் திட்டத்தின் கீழ் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை உயர்வான தொகையைக் காட்டுகின்றது. இக்கடன் திட்டத்தின் கீழ் கிராமியப் பிரதேசங்களில் விவசாயப் பயிர்களை பயிரிடும் விவசாயிகளை இலக்காகக் கொண்டு, கடன் வழங்குவதற்காக தனியார் வங்கிகளில் காணப்படும் உயர்வான கேள்வியைக் கருத்திற் கொண்டு காகில்ஸ் வங்கி மற்றும் பப்ளிக் வங்கி 2017ஆம் ஆண்டில் இக்கடன் வழங்கும் செயன்முறைக்குள் இணைந்து கொண்டுள்ளன.

**வரைபு 2.2 : 2017 இல் மாவட்ட வாரியாக தேசிய முழுமையான கிராமிய கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள்**




2017 ஆம் ஆண்டில் பயிர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களைப் பொறுத்த வரை, நெற் பயிர்ச்செய்கைக்கே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதோடு, அது மொத்தக் கடன் வழங்கலில் 65 சதவீதமாகும். மேலும், அந்நியச் செலாவணியின் வெளிப்பாய்ச்சலைக் குறைப்பதற்காக இறக்குமதிப்

பிரதியீடாகப் பயன்படுத்தப்படும் சோளம், மரக்கறி, போன்ற பயிர்களுக்கும் 2017ஆம் ஆண்டில் கூடுதலான கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது. (வரைபு 2.3).




### 2.4.3.1 பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டம்

வர்த்தக அளவிலான பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டம் (CSDDLS), குறைந்தது 25 பசுக்களுடன் 1,000 மெகா பண்ணைகளை ஸ்தாபிப்பதற்காக நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களை வர்த்தக மட்டத்திலான பால் உற்பத்தியில் ஈடுபடுவதனை ஊக்குவிக்கும் நோக்குடன் 2013ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் கீழ் நடுத்தர அளவிலிருந்து பாரிய அளவு வரை பால் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக 6 சதவீத வருடாந்த வட்டி மானியமொன்று தெரிவு செய்யப்பட்ட பங்கேற்பு 13 நிதி நிறுவனங்களுக்குச் செலுத்தப்படும். இக்கடன் திட்டத்தின் கீழ் கூடியது ரூபா. 25 மில்லியன் வரை கடன் வழங்கப்படுவதோடு, 6 மாத தயவுக் காலப்பிரிவு உள்ளடங்கலாக கடனை மீளச் செலுத்துவதற்கான காலப்பகுதி 5 வருடங்களாகும். இத்துறையில் ஈடுபட்டுள்ள தொழில்முயற்சியாளர்களின் விசேட வேண்டுகோளுக்கு இணங்க, 2014ஆம் ஆண்டில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் நோக்குடன் ஒரு பண்ணையில் குறைந்தது இருக்க வேண்டிய பசுக்களின் எண்ணிக்கை 7 வரை குறைக்கப்பட்டது. அதன்படி, கடந்த சில வருடங்களாக இக்கடன் திட்டத்தின் மூலம் பகிரப்பட்ட கடன்களின் தொகையின் அதிகரிப்புக்கு இது வழி வகுத்துள்ளது. 2014ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடன் பகிர்வின் தொகை ரூபா. 1,389.57 மில்லியனிலிருந்து ரூபா. 1,648.46 மில்லியன் வரை அதிகரித்துள்ளதோடு. 2017ஆம் ஆண்டில் அரசாங்கம் நிதி நிறுவனங்களால் வழங்கப்பட்ட இக்கடன்களுக்கு ரூபா. 91.02 மில்லியனை வட்டி மானியமாகச் செலுத்தியது. 2017.12.31ஆம் திகதியிலான இக்கடன் திட்டத்தின் முன்னேற்றம் 2.12 அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.12 : பாரிய அளவிலான பால் உற்பத்தி அபிவிருத்திக் கடன் திட்டத்தின் முன்னேற்றம்**

| வருடம் | பயனாளிகளின் எண்ணிக்கை | கடன் தொகை (ரூபா. மில்லியன்) | செலுத்தப்பட்ட மானியம் (ரூபா. மில்லியன்) |
|---|---|---|---|
| 2013 | 112 | 719.62 | 1.80 |
| 2014 | 846 | 1,389.57 | 41.90 |
| 2015 | 1,950 | 1,616.61 | 80.10 |
| 2016 | 3,112 | 2,07316 | 134.03 |
| 2017 | 1,671 | 1,648.46 | 91.02 |
| **மொத்தம்** | **7,691** | **7,447.42** | **348.85** |

மூலம்: பிராந்திய அபிவிருத்தித் திணைக்களம் , இலங்கை மத்திய வங்கி

இக்கடன் திட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டில் பகிரப்பட்ட கடன்களைப் பொறுத்த வரை ரூபா. 560 மில்லியன் பெறுமதியான கூடுதலான கடன் பகிர்வு, இலங்கை வங்கியினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, மக்கள் வங்கியும், டீஎப்சீசீ வங்கியும் முறையே ரூபா. 208 மில்லியனையும், ரூபா. 147 மில்லியனையும் பகிர்ந்துள்ளன. மேலும், ஏனைய வங்கிகளுடன் ஒப்பிடுகையில் ஹட்டன் நெஷனல் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி, மற்றும் லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி ஆகியனவற்றினாலும் குறிப்பிடத்தக்க அளவிலான கடன் தொகை பகிரப்பட்டுள்ளது.

### 2.4.4 களஞ்சிய வசதிகள்

அறுவடைக் காலத்தில் நெல், சோளம், சோயா அவரை, எள்ளு, உளுந்து, மிளகு, கடலை போன்ற அவர்களது உற்பத்திகளைக் களஞ்சியப்படுத்துவதற்கான தரமான களஞ்சிய வசதிகளை அவர்களுக்கு வழங்குவதன் மூலம் தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களின் மூலம் கூடுதலான பயனைப் பெற்றுக் கொள்வதற்கு உதவுவதற்காக, அரசாங்கம் உலக வங்கியின் உதவியுடன் புத்தாக்கப் பொறிகளுடனான நவீன தொழில்நுட்ப வசதிகளை அறிமுகப்படுத்தியது. இக்களஞ்சியங்களின் நோக்கம், இலத்திரனியல், மற்றும் பணமாக மாற்றத்தக்க களஞ்சிய பற்றுச் சீட்டு நிதிப் பொறிமுறையை அபிவிருத்தி செய்வதன் மூலம் நிதிச் சேவைகளை அணுகுவதற்கான பிணையமாக அவ்வுற்பத்திப் பொருட்களைப் பயன்படுத்துவற்கு விவசாயிகளுக்கு வசதியளிப்பதாகும். அதன் படி, அனுராதபுரம், மொனராகலை மற்றும் மன்னார் ஆகிய 3 மாவட்டங்களிலும் மூன்று களஞ்சியங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதோடு, அதன் மொத்தக் கொள்வனவு 24,000 மெட்ரிக் தொன்களாகும்.

2017ஆம் ஆண்டில் உபுல்தெனிய களஞ்சியக் கட்டடத் தொகுதியில் 252 விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களை களஞ்சியப்படுத்தியதோடு, அதன் மூலம் 36 விவசாயிகள் ரூபா. 4.6 மில்லியன் தொகையை இப்பற்றுச் சீட்டை பிணையமாக வைத்து குறுகிய கால நிதி வசதிகளை பிரதேச அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுக் கொண்டுள்ளனர். இக்காலப்பகுதிக்குள் புத்தல களஞ்சியக் கட்டடத் தொகுதியில் 129 விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களை களஞ்சியப்படுத்தியதோடு, அதன் மூலம் 81 விவசாயிகள் ரூபா. 12.3 மில்லியன் தொகையை குறுகிய கால கடன் வசதிகளாக பெற்றுக் கொண்டுள்ளனர். அதே போல, மன்னார் களஞ்சியக் கட்டடத் தொகுதியில் 85 விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களை களஞ்சியப்படுத்தியதோடு, அதன் மூலம் 58 விவசாயிகள் ரூபா. 1.51 மில்லியனை குறுகிய கால நிதி வசதிகளாகப் பெற்றுக் கொண்டனர்.

2017ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதியளவில் உபுல்தெனிய களஞ்சியக் கட்டடத் தொகுதியில் 5 வகையான தானிய வகைகள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததோடு, அவற்றில் பிரதானமாக, நெல் (285.5 மெட்ரிக் தொன்), சோயா அவரை (251.6 மெட்ரிக் தொன்), சோளம் (179.1 மெட்ரிக் தொன்), எள்ளு (25.5 மெட்ரிக் தொன்) அடங்கியிருந்தன. அதே போல, மன்னார் களஞ்சியக் கட்டடத் தொகுதியில் பல்வேறு வகையான நெல் வகைகள் (683.5 மெட்ரிக் தொன்), களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. அறுவடை காலத்தில் குறிப்பிட்ட பிரதேசத்தில் விவசாயிகள் இவ்வாறு வழங்கப்பட்டுள்ள களஞ்சிய வசதிகளை பயன்படுத்தியுள்ளதோடு, விலை உறுதிப்படுத்தப்படும் சந்தர்ப்பத்திலும், அதிகரிக்கும் சந்தர்ப்பத்திலும் அவற்றை விற்பனை செய்வதறகான நடவடிக்கைகளையும் எடுப்பர்.

இக்களஞ்சியசாலையல் களஞ்சியப்படுத்தப்பட்ட நேரத்தில் மொத்த இருப்புக்களின் பெறுமதி ரூபா. மில்லியன் 33.5 வாக இருந்ததோடு, அவற்றை விற்பனை செய்த சந்தர்ப்பத்தில் அவற்றின் மொத்தப் பெறுமதி ரூபா. மில்லியன் 43.6 ஆகவும் இருந்தது. அதன் படி விவசாயிகளுக்கு ரூபா. மில்லியன் 10.1 இலாபம் உழைப்பதற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது. இவ்விருப்புக்கள் உபுல்தெனிய களஞ்சியசாலையில் களஞ்சியக் கட்டணமாக ரூபா. மில்லியன் 1.1 வும், மற்றும் சுத்தப்படுத்துவதற்கான கட்டணமாக ரூபா. மில்லியன் 0.41 வும் பெற்றுக் கொள்ளப்பட்டது.

இக்களஞ்சியசாலைகளின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டு அரசாங்கத்தினால் மேலும் இது போன்ற 3 களஞ்சியசாலைக் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதாவது, பொலன்னறுவை, கிளிநொச்சி, இரத்தினபுரி மாவட்டங்களிலேயே இக்களஞ்சியங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன. இதன்படி, இரத்தினபுரி களஞ்சியக் கட்டடத்தின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு, பொதுமக்களின் பாவனைக்காக கையளிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அதே போல, கிளிநொச்சி, மற்றும் பொலன்னறுவை களஞ்சிக் கட்டடங்களின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன.

### 2.4.5 "கெத்தட்ட அருண பொஹொர திரிய" பயிர் காப்புறுதி

வறட்சி, வெள்ளம் மற்றும் யானைகளாலும் விவசாயிகளின் பயிர்களுக்கு ஏற்படும் அழிவுகளுக்கு நிவாரணம் ஒன்றை வழங்குவதற்காக ஸ்தாபிக்கப்பட்ட "கெத்தட்ட அருண பொஹொர திரிய" பயிர் காப்புறுதி விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபையினால் 2017ஆம் ஆண்டிலிருந்து வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. 2017ஆம் ஆண்டில் 5,825 பேருக்கு அண்ணளவாக ரூபா. 30.71 மில்லியன் பயிர் அழிவுகளுக்கான நட்டஈடாக வழங்கப்படடுள்ளது.

2017ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து ஆகஸ்ட் மாதம் வரையிலான காலப்பகுதியில் நிலவிய கடும் வறட்சி நிலைமையின் காரணமாக பயிர்ச்செய்கையில் அரைவாசி அழிவுற்றுள்ளதோடு, விவசாய மற்றும் வாழ்வாதார நடவடிக்கைகளுக்கு ஏற்பட்டன. "கெத்தட்ட அருண பொஹொர திரிய" பயிர் காப்புறுதித் திட்டம் பயிர்களுக்கு ஏற்பட்ட அழிவுகளையும் மற்றும் வாழ்வாதாரங்களை இழந்ததனால்

ஏற்பட்ட உண்மையான அழிவுகளையும் உள்ளடக்காததால் உலர் உணவுகளை வழங்கும் திட்டம் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் மூலம் விவசாயிகளின் பயிர் அழிவுகள் மற்றும் வாழ்வாதார அபிவிருத்திக்காக ரூபா. 5.2 மில்லியன் தொகை நட்ட ஈடாக வழங்கப்பட்டது. "கெத்தட்ட அருண பொகொர திரிய" பயிர் காப்புறுதித் திட்டத்துக்கும் மற்றும் உலர் உணவுகளை வழங்குவதற்கான நிகழ்ச்சித் திட்டத்துக்கும் 2017ஆம் ஆண்டில் செலவு செய்த தொகையும் பயனாளிகளின் எண்ணிக்கையும் கீழே தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.13 : 2017ஆம் ஆண்டில் "கெத்தட்ட அருண பொகொர திரிய" பயிர் காப்புறுதித் திட்டத்தினதும், உலர் உணவு வழங்கலினதும் முன்னேற்றம்**

| மாதம் | "கெத்தட்ட அருண பொகொர திரிய" நிகழ்ச்சித் திட்டம் | | உலர் உணவு வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் | |
|---|---|---|---|---|
| | பயனாளிகளின் எண்ணிக்கை | செலவு (ரூபா. மில்லியன்) | பயனாளிகளின் எண்ணிக்கை | செலவு (ரூபா. மில்லியன்) |
| ஜனவரி | 11 | 0.19 | - | - |
| பெப்ரவரி | 1,177 | 11.63 | - | - |
| மார்ச் | 233 | 1.11 | - | - |
| ஏப்ரில் | - | - | 23,050 | 2,300.50 |
| மே | - | - | 132,714 | 1,327.14 |
| ஜூன் | 4,189 | 16.69 | 47,246 | 472.46 |
| ஜூலை | 170 | 0.67 | 17,213 | 172.46 |
| ஆகஸ்ட் | 45 | 0.42 | 86,201 | 862.01 |
| செப்தெம்பர் | - | - | - | - |
| அக்டோபர் | - | - | 9,912 | 99.12 |
| நவம்பர் | - | - | - | - |
| டிசம்பர் | - | - | - | - |
| **மொத்தம்** | **5,825** | **30.71** | **523,336** | **5,233.36** |


மூலம்: விவசாய மற்றும் கமநல சேவைகள காப்புறுதிச் சபை

"கெத்தட்ட அருண பொஹொர திரிய" பயிர் காப்புறுதித் திட்டத்தில் நெற் பயிர்ச்செய்கைக்கான பயிர் அழிவுள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டுள்ளதோடு, பயிர்களுக்கான உண்மையான அழிவுகள் அதில் உள்ளடக்கப்படவில்லை. எனவே, அரசாங்கத்திற்கு ஏற்படும் நிதி இடரைக் குறைப்பதற்கும் மற்றும் விவசாயிகள் நெருக்கடிகளின்றி நட்டஈட்டை பெற்றுக்கொள்வதற்கான குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு (Index based) பயிர் காப்புறுதித் திட்டமொன்றுக்கான கேள்வியொன்று காணப்படுகின்றது.

இவ்விடயங்களைக் கருத்திற் கொண்டு தேசிய காப்புறுதி திட்டமொன்று (NCIS) 2018 வரவு செலவுத் திட்டப் பிரேரணைகள் மூலம் நெல், சோளம், சோயா, வெங்காயம், உருளைக் கிழங்கு, மிளகாய் உள்ளடங்கலாக 5 வகையான பயிர்களுக்கு ஒரு ஏக்கருக்கு ரூபா. 40,000 காப்புறுதியொன்று பிரகடனப்படுத்தப்பட்டது. இத்திட்டத்துடன் இணைவதற்கு விருப்பமான விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு ரூபா. 1,800/- காப்புறுதித் தவணையாக செலுத்துதல் வேண்டும். ஆயினும், இத்தவணை தொகையானது நேரடியாக விவசாயிகளிடமிருந்து அறவிடப்படுவதனால், விவசாய சமூகத்துக்கிடையில் பிரச்சினையொன்றை உருவாக்கக் கூடிய நிலைமையை ஏற்படுத்தியுள்ளதோடு, அரசாங்கமே விவசாயிகளுக்காக மொத்தத் தவணைப் பணத்தையும் ஏற்பதற்குத் தீர்மானித்துள்ளது. காப்புறுதித் திட்டத்தின் தவணைகளைச் செலுத்துவதற்காக 2018 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அண்ணளவாக ரூபா. 3,000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் படி ஒரு ஏக்கருக்கு ரூபா. 40,000/- காப்புறுதி உள்ளடக்கமொன்றை இலவசமாக பெற்றுக் கொள்ள முடிவதோடு, அது முதலில் இருந்த காப்புறுதித் திட்டத்தின் நன்மைகளை விட 4 மடங்காகவும் உள்ளது. அது மாத்திரமல்லாது இக்காப்புறுதித் திட்டத்தைப் பயன்படுத்துவதன் மூலம் கூடியது ரூபா. 40,000/- கடனொன்றைப் பெற்றுக் கொள்வதற்கும் பயன்படுத்தக் கூடியதாக உள்ளது.

### 2.4.6 விவசாயிகளுக்கான சமூக பாதுகாப்பு

விவசாயிகளின் ஓய்வூதியத் திட்டத்தின் பிரதான நோக்கம் நாட்டின் விவசாய விருத்திக்காக தமது இளம் பருவத்தை அர்ப்பணித்த விவசாயிகளின் நலனை உறுதிப்படுத்துவதற்காகும். இத்திட்டம் விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. 2017ஆம் ஆண்டின் இறுதியில் 148,201 முதிய விவசாயிகள் இத்திட்டத்தின் மூலம் நன்மை அடைந்ததோடு, ரூபா. 2,670/- அவர்களுக்கிடையில் 2017ஆம் ஆண்டில் பகிர்ந்தளிக்கப்பட்டது. விவசாய ஓய்வூதிய நிதியம் தன்னிறைவு மட்டத்தினை அடையாமையினால் திறைசேரி ரூபா. 205 மில்லியனை மாதாந்தம் ஓய்வுதியத்துக்காக விவசாய கமநல காப்புறுதிச் சபைக்கு வழங்குகின்றது. தற்போது இத்திட்டத்தில் பயன் பெறுவதற்கான தகுதியுள்ள விவசாயிகள் அவர்களின் மாதாந்த ஓய்வூதியத்தினை ஒவ்வொரு மாதமும் முதலாம் வாரத்தில் தபால் அலுவலகங்களிலிருந்து பெற்றுக் கொள்வார்கள்.




## 2.5 சிறு உடமையாளர்கள்

### 2.5.1 சிறு உடமை பெருந்தோட்டத்துறைக்கான உதவி

பெருந்தோட்டத்துறையின் சிறந்த வளர்ச்சியானது ஒரு நாட்டுக்கு மிகவும் அத்தியாவசியமாக இருப்பது அந்நியச் செலாவணியை உழைக்கும் போது இத்துறையானது பெரும் பங்களிப்பைச் செலுத்துவதனாலாகும். எனவே, சுதந்திரத்துக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த சகல அரசாங்கங்களும் இத்துறையின் தொழிற்பாட்டுக்கு காலத்திற்கு ஏற்ப தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அதன்படி 2017ஆம் ஆண்டில் சிறு உடமை பெருந்தோட்டத் துறையை ஊக்குவிப்பதற்காக அதிக அளவிலான வெகுமதிகளையும், மற்றும் மானியங்களையும் வழங்கிய ஒரு ஆண்டாக இனங்காணப்பட்டுள்ளது.

அட்டவணை 2.14 : சிறு உடமை பெருந்தோட்டத் துறையின் முன்னேற்றம் 2011 - 2017

| ஆண்டு | தேயிலை | | இறப்பர் | | தெங்கு | |
|---|---|---|---|---|---|---|
| | பரப்பு (ஹெக்.) | மொத்த உற்பத்தி (கி.கி. மில்லியன்) | பரப்பு (ஹெக்.) | மொத்த உற்பத்தி (கி.கி. மில்லியன்) | பரப்பு (ஹெக்.) | மொத்த உற்பத்தி (மில்லியன் காய்கள்) |
| 2011 | 206,104 | 328 | 128,120 | 158 | 394,836 | 2,303 |
| 2012 | 203,020 | 328 | 130,780 | 152 | 394,836 | 2,411 |
| 2013 | 202,408 | 340 | 133,668 | 130 | 394,836 | 2,061 |
| 2014 | 202,800 | 338 | 134,137 | 99 | 394,836 | 2,890 |
| 2015 | 202,800 | 329 | 134,906 | 89 | 394,836 | 3,027 |
| 2016 | 202,022 | 292 | 136,274 | 79 | 440,000 | 3,098 |
| 2017 | 202,540 | 308 | 135,632 | 83 | 440,000 | 2,449 |

மூலம்: பிராந்திய அபிவிருத்தித் திணைக்களம் , இலங்கை மத்திய வங்கி

### 2.5.2 சிறு உடமை பெருந்தோட்டத் துறைக்கு வழங்கப்பட்ட மீள் நடுகைக்கும் புது நடுகைக்குமான மானியம்

சிறு உடமை பெருந்தோட்டத் துறையை ஊக்குவிப்பதற்காக தேயிலை மற்றும் இறப்பர் மீள்நடுகைக்கும், புது நடுகைக்கும் அரசாங்கம் தொடர்ச்சியாக வெகுமதிகளை வழங்கி வந்துள்ளது. அதன்படி, தேயிலை மீள் நடுகையையும், புது நடுகையையும் பொறுத்த வரை ஒரு ஏக்கருக்கு ரூபா. 50,000/- மானியமொன்று வழங்கப்பட்டுள்ளது. மேலும், இறப்பர் மீள் நடுகையையும், புது நடுகையையும் பொறுத்த வரை முறையே இரு நடுகைகளுக்கும் வெவ்வேறாக ரூபா. 175,000/- வும் 150,000/-வும் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

2017ஆம் ஆண்டில் அரசாங்கம், தேயிலை மற்றும் இறப்பர் சிறு உடமையாளர்களுக்கு மீள் நடுகைக்கும், புது நடுகைக்குமான மானியமாக ரூபா. 1,045/- மில்லியனை வழங்கியுள்ளது. இதன் மூலம் நன்மை அடைந்த விவசாயிகளை எடுத்துக் கொண்டால், 25,509 பேர் இம்மானிய முறையின்

மூலம் நன்மை அடைந்துள்ளதோடு, அது 2016ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 16 சதவீத வீழ்ச்சியாகும்.

**அட்டவணை 2.15 : தேயிலை மற்றும் இறப்பர் சிறு உடமையாளர்களுக்கு மீள் நடுகை மற்றும் புது நடுகைக்கு வழங்கப்பட்ட மானியங்களின் முன்னேற்றம்**

| ஆண்டு | மீள் நடுகைக்கான மானியம் | | | | புது நடுகைக்கான மானியம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தேயிலை | | இறப்பர் | | தேயிலை | | இறப்பர் | |
| | பயனாளிகளின் எண்ணிக்கை | மானியத்தின் அளவு (ரூபா மில்லியன்) | பயனாளிகளின் எண்ணிக்கை | மானியத்தின் அளவு (ரூபா. மில்லியன்) | பயனாளிகளின் எண்ணிக்கை | மானியத்தின் அளவு (ரூபா மில்லியன்) | பயனாளிகளின் எண்ணிக்கை | மானியத்தின் அளவு (ரூபா மில்லியன்) |
| 2013 | 30,955 | 351.87 | 2,622 | 171.31 | 3,759 | 42.41 | 2,938 | 167.73 |
| 2014 | 16,555 | 258.09 | 2,004 | 219.07 | 3,381 | 66.98 | 2,247 | 213.47 |
| 2015 | 17,252 | 420.07 | 852 | 173.36 | 4,732 | 128.12 | 1,076 | 18.83 |
| 2016 | 24,995 | 531.89 | 668 | 337.51 | 3,759 | 46.73 | 942 | 179.90 |
| 2017 | 20,271 | 464.33 | 1,165 | 346.81 | 3,416 | 60.23 | 657 | 173.64 |

மூலம்: பிராந்திய அபிவிருத்தித் திணைக்களம் , இலங்கை மத்திய வங்கி

### 2.5.3 பதிவு செய்யப்பட்ட தேயிலைத் தொழிற்சாலைகளின் உரிமையாளர்களுக்கான தொழில் மூலதனக் கடன் திட்டம்

தேயிலைத் தொழிற்சாலைகளின் உரிமையாளர்களுக்கு அவர்களின் தொழில்மூலதனத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக 2015ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இக்கடன் திட்டம் 2017ஆம் ஆண்டுவரை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது. அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் கண்காணிப்பின் கீழ் அது இலங்கைத் தேயிலைச் சபையின் மூலம் குறுகிய கால அடிப்படையில் அரச மற்றும் தனியார் துறையின் வர்த்தக வங்கிகளின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

இக்கடனுக்கான வட்டி வீதம் வருடாந்தம் 6 சதவீதமாக இருந்ததோடு, திறைசேரியினால் 2 சதவீத வட்டி மானியமொன்று வங்கிக்கு வழங்கப்படும். இரண்டு வருடத்தின் வட்டி மானியத்தை தீர்ப்பனவு செய்வதற்காக அரசாங்கம் ரூபா. 516 மில்லியனை ஒதுக்கீடு செய்துள்ளது (2016 – 2017).

2017ஆம் ஆண்டில் 222 தொழில் மூலதனக் கடன்கள் தேயிலைத் தொழிற்சாலைகளின் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதோடு, அதன் மொத்தப் பெறுமதி ரூபா. 7,025 மில்லியனாகும். அரசாங்கம் இக்கடன் திட்டத்தின் வட்டி மானியத்தைத் தீர்ப்பனவு செய்வதற்காக பங்கேற்பு நிதி நிறுவனங்களுக்கு ரூபா. 88.1 மில்லியனை ஈடுசெய்துள்ளது.

**அட்டவணை 2.16 : காலாண்டு ரீதியாக தொழில் மூலதனக் கடன் திட்டத்தின் முன்னேற்றம் - 2017**


| விபரம் | பயனடைந்த தேயிலைத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை | செலுத்தப்பட்ட வட்டி மானியம் (ரூபா. மில்லியன்) |
|---|---|---|
| 1 ஆம் காலாண்டு | 220 | 26.21 |
| 2 ஆம் காலாண்டு | 221 | 24.15 |
| 3 ஆம் காலாண்டு | 220 | 21.86 |
| 4 ஆம் காலாண்டு | 222 | 15.87 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி, அபிவிருத்தி நிதித் திணைக்களம்

## 2.6 உணவுப் பாதுகாப்பு

### 2.6.1 நெற்கொள்வனவு நிகழ்ச்சித் திட்டம்

இலங்கையின் பிரதான உணவு நெல்லாக இருப்பதனால், உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நெல்லுற்பத்தி பிரதான ஒரு காரணியாக விளங்குகின்றது. ஏனெனில், 2016/17 பெரும் போகம், 2017 சிறு போகம், 2017/18 பெரும் போகமும், சிறு போகமும் என தொடர்ச்சியாக மூன்று போகங்களிலும் நிலவிய வறட்சி நிலைமையின் காரணமாக 2017ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த நெற் பயிர்ச்செய்கையும் மோசமான முறையில் பாதிக்கப்பட்டது. அதன்படி, வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள நெல் பயிரிடப்பட்ட பிரதேசங்களில் நெல்லுற்பத்தி கடுமையான முறையில் வீழ்ச்சியடைந்துள்ளது. 2016ஆம் ஆண்டில் 4.42 மெட்ரிக் தொன் மில்லியனான வருடாந்த நெல்லுற்பத்தி 2017ஆம் ஆண்டில் 2.38 மெட்ரிக் தொன் மில்லியன் வரை குறைவடைந்துள்ளது.



வரைபு 2.5 : மொத்த நெல்லுற்பத்தி, 2000 - 2017

மேலே வரைபட இலக்கம் 12.7இல் காட்டப்பட்ட விபரங்களுக்கு ஏற்ப, 2000ஆம் ஆண்டிலிருந்து குறைந்த வருடாந்த நெல்லுற்பத்தியை 2017ஆம் ஆண்டே பதிவு செய்துள்ளது. அதன்படி 14 சதவீத சாதாரண ஈரலிப்பை விட கூடுதலான ஈரலிப்பொன்று இருந்தாலும் கூட, நெல்லுக்கான உயர்வான கேள்வியொன்று தனியார் துறை தொழிற்சாலைகளின் உரிமையாளர்களாலேயே உருவாக்கப்பட்டது. எனவே, 2017ஆம் ஆண்டில் விலைகளை உறுதிப்படுத்துவதறகு அரசாங்கத்தின் தலையீடு அவசியப்படவில்லை. (அட்டவணை 2.17)

**அட்டவணை 2.17 : அரசாங்க நெற்கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு**

| போகம் | நாடு (மெ.தொ.) | சம்பா (மெ.தொ.) | மொத்தம் (மெ.தொ.) | பெறுமதி (ரூபா. மில்லியன்) |
|---|---|---|---|---|
| 2009/10 பெரும் போகம் | 63,850 | 6,919 | 70,769 | 1,995 |
| 2010 சிறு போகம் | 83,819 | 27,910 | 111,729 | 3,184 |
| மொத்தம் | **147,669** | **34,829** | **182,498** | **5,179** |
| 2010/11 பெரும் போகம் | 2,913 | 556 | 3,469 | 98 |
| 2011 சிறு போகம் | 58,967 | 16,205 | 75,172 | 2,137 |
| மொத்தம் | **61,880** | **16,761** | **78,641** | **2,235** |
| 2011/12 பெரும் போகம் | 107,319 | 8,467 | 115,786 | 3,259 |
| 2012 சிறு | 9,936 | 540 | 10,476 | 294 |
| மொத்தம் | **117,255** | **9,007** | **126,262** | **3,553** |
| 2012/13 பெரும் போகம் | 107,445 | 31,205 | 138,650 | 4,530 |
| 2013 சிறு போகம் | 81,834 | 12,542 | 94,376 | 3,058 |
| மொத்தம் | **189,279** | **43,747** | **233,026** | **7,588** |
| 2013/14 பெரும் போகம் | 3,971 | 592 | 4,563 | 148 |
| 2014 சிறு போகம் | 0 | 0 | 0 | 0 |
| மொத்தம் | **3,971** | **592** | **4,563** | **148** |
| 2014/15 பெரும் போகம் | 126,203 | 34,366 | 160,569 | 7,510 |
| 2015 சிறு போகம் | 162,526 | 12,487 | 175,013 | 7,950 |
| மொத்தம் போகம் | **288,729** | **46,853** | **335,582** | **15,460** |
| 2015/16 பெரும் போகம் | 91,785 | 40,196 | 131,981 | 5,139 |
| 2016 சிறு போகம் | 11,054 | 14,384 | 25,438 | 1,056 |
| மொத்தம் போகம் | **102”839** | **54”580** | **157”419** | **6”195** |
| 2016/17 பெரும் போகம் | 0 | 0 | 0 | 0 |
| 2017 சிறு போகம் | 0 | 0 | 0 | 0 |
| மொத்தம் போகம் | **0** | **0** | **0** | **0** |
| **மொத்தம்** | **911,622** | **206,369** | **1,117,991** | **40,358** |

மூலம்: பிராந்திய அபிவிருத்தித் திணைக்களம் இலங்கை மத்திய வங்கி

## 2.6.2 2017ஆம் ஆண்டில் நெற்கொள்வனவில் தனியார் துறையின் தலையீடு

நெல் அறுவடையின் வீழ்ச்சியானது உயர்வான போட்டித் தன்மையொன்றுடன் நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக தனியார் துறையை ஊக்குவித்தது. அதன் பிரதிபலனாக நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக அரசாங்கத்தின் தலையீடு தேவைப்படவில்லை. எனவே அரசாங்கம்,

தனியார் துறை வங்கிகளின் ஊடாக தனியார் துறையிடமிருந்து பெற்றுக் கொண்ட வங்கி நிதி, பிரதான நிதி மூலமாக விளங்கியது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் நெற்கொள்வனவுக்கு வங்கிகளினால் வழங்கப்பட்ட மொத்தக் கடனின் அளவு வீழ்ச்சியடைந்துள்ளது. மொத்த நெல்லுற்பத்தியின் வீழ்ச்சி இதன் மூலம் காட்டப்படுகின்றது. ஆயினும், 3 பிரதான அரச வங்கிகளையும் வெவ்வேறாக நோக்கினால், பிரதேச அபிவிருத்தி வங்கியின் கடன்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதோடு, மக்கள் வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி இரண்டும் இவ்வாண்டில் அதிகமான நிதித் தொகையை வழங்கியுள்ளது. ஆயினும் இலங்கை வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கையும் மற்றும் கடன் தொகையின் வேகமும் வீழ்ச்சியைக் காட்டுகின்றது. தனியார் துறை வங்கிகளுக்கு இடையில் வர்த்தக வங்கி மற்றும் ஹட்டன் நெஷனல் வங்கி இரண்டும் நெற்பயிர்ச்செய்கைத் துறைக்கு மிகவும் கவர்ச்சியான கடன்களை வழங்குவோராக விளங்கியுள்ளது. (அட்டவணை 2.18)

**அட்டவணை 2.18 : நெல் கொள்வனவிற்கு தனியார் துறைக்கு வழங்கிய கடன் தொடர்பான ஒப்பீட்டுக் கண்ணோட்டம்**

| வங்கி | 2016/17 பெரும் போகம் | | 2017 சிறு போகம் | | மொத்தம் : (2017) | | மொத்தம் : (2016) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கடன்களின் எண்ணிக்கை | மொத்தக் கடன் தொகை (ரூபா. மில்லியன்) | கடன்களின் எண்ணிக்கை | மொத்தக் கடன் தொகை (ரூபா. மில்லியன்) | கடன்களின் எண்ணிக்கை | மொத்தக் கடன் தொகை (ரூபா. மில்லியன்) | கடன்களின் எண்ணிக்கை | மொத்தக் கடன் தொகை (ரூபா. மில்லியன்) |
| மக்கள் வங்கி | 145 | 5,975ஊ85 | 67 | 1,124.50 | 212 | 7,100.35 | 236 | 3,096.00 |
| இலங்கை வங்கி | 182 | 9ஊ626ஊ84 | 278 | 10,370.33 | 460 | 19,997.17 | 777 | 27,076.60 |
| பிரதேச வங்கி | 68 | 301ஊ75 | 72 | 282.10 | 140 | 583.85 | 48 | 170.95 |
| **அரச வங்கிகளின் உப மொத்தம்** | **395** | **15,904.44** | **417** | **11,776.93** | **812** | **27,681.37** | **1061** | **30,343.55** |
| வர்த்தக வங்கி | 117 | 398.34 | 325 | 1,223.88 | 442 | 1,622.22 | 133 | 1,698.58 |
| சம்பத் வங்கி | 60 | 1,249.25 | 29 | 384.95 | 89 | 1,634.20 | 365 | 5,606.90 |
| டீஎப்சீசீ வங்கி | 18 | 1,245.00 | 18 | 1,251.00 | 36 | 2,496.00 | 37 | 1,273.45 |
| செலான் வங்கி | 82 | 462.84 | 65 | 415.70 | 147 | 878.54 | 216 | 816.36 |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 16 | 464.50 | 9 | 480.00 | 25 | 944.50 | 199 | 1,457.59 |
| ஹட்டன் நெஷனல் வங்கி | 227 | 2,160.00 | 204 | 2,159.90 | 431 | 4,319.90 | 254 | 2,446.70 |
| **தனியார் வங்கிகளின் உப மொத்தம்** | **520** | **5,979.93** | **650** | **5,915.43** | **1,170** | **11,895.36** | **1,204** | **13,299.58** |
| **முழு மொத்தம்** | **915** | **21,884.37** | **1,067** | **17,692.36** | **1,982** | **39,576.73** | **2,265** | **43,643.13** |

மூலம்: பிராந்திய அபிவிருத்தித் திணைக்களம் , இலங்கை மத்திய வங்கி

### 2.6.3 வாழ்க்கைச் செலவு

நாட்டில் நிலவிய இயற்கை அழிவுகளும் மற்றும் வறட்சி நிலைமைகளும் நாட்டின் பொருளாதாரத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியதோடு, அதன் மூலம் நாட்டின் வாழ்க்கைச் செலவில் பாதகமான தாக்கம் ஏற்பட்டது. சகல விவசாய உற்பத்திகளினதும் அறுவடைகள் அழிவுக்குள்ளாகியமை, வரையறுக்கப்பட்ட உற்பத்திகளுக்கு உயர்வான கேள்வி நிலைமையொன்று ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்தது. அதே போல தெற்காசிய மற்றும் கிழக்காசிய பொருளாதாரங்கள் அநேகமானவற்றில் இயற்கை அழிவுகளினால் தாக்கத்துக்குள்ளானமை இறக்குமதிகளின் விலையின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இது 2017ஆம் ஆண்டில் உணவுப் பாதுகாப்புக்கு பாரிய ஒரு அடியாக அமைந்தது. பிரதானமாக உள்ளூர் அரிசி, மற்றும் தேங்காய் சந்தை மீது பாதகமான தாக்கம் ஏற்பட்டது. அதற்கு மேலதிகமாக உருளைக் கிழங்கு, பெரிய வெங்காயம், பருப்பு, கருவாடு, ஏனைய தானியங்கள் மற்றும் மிளகாய் என்பனவற்றின் மீது பிரதானமாக கவனம் செலுத்தப்பட்டது.

அதன் பிரதிபலனாக அரசாங்கத்தினால் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு உரிய நிரம்பல் விலையும் குறிப்பிட்ட வரியும் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்பட்டு அவை மீளாய்வும் செய்யப்பட்டன.

ஏற்றுக் கொள்ளக் கூடிய குறைந்த மட்ட வாழ்க்கைச் செலவை உறுதிப்படுத்தும் பொருட்டு, நேர அடிப்படையில் உயர்வான சக்தியுடன் நேரத்துக்குரிய தீர்மானங்களை எடுக்கும் நோக்கத்துடன் ஸ்தாபிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உப குழுவினால் பல முன்னெடுப்புக்கள் எடுக்கப்பட்டன. நுகர்வோரால் தாங்கக் கூடிய சில்லறை விலையை உறுதிப்படுத்துவதற்காக இறக்குமதி செய்யப்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மீதான வரி நீக்கப்பட்டது. உருளைக் கிழங்கு, பெரிய வெங்காயம் மற்றும் அரிசியின் மீது குறிப்பிடத்தக்க அளவில் வரிக் குறைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. உருளைக் கிழங்கு, மற்றும் பெரிய வெங்காயம் இரண்டுக்கும் ஒரு கி.கிராமுக்கு நடைமுறையிலிருந்த வரி ரூபா. 40/- வாகும். இது ஒரு கிலோ கிராமுக்கு 1/- விசேட பொருட்களுக்கான வரியாக திருத்தம் செய்யப்பட்டது. வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான உடனடித் தீர்வாக சுப்பர் மார்க்கட்டுக்கள் மற்றும் லங்கா சதொச லிமிட்டட்டின் ஊடாக நுகர்வோருக்கு உணவுப் பொதியொன்று வழங்கப்பட்டது. இப்பொதி, அரிசி, சீனி பருப்பு, நெத்தலிக் கறுவாடு, வெங்காயம், உருளைக் கிழங்கு, மெக்கரல் டின்மீன் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. அதன்படி மேலே குறிப்பிடப்பட்ட உணவுப் பொருட்கள் அதன் இறக்குமதிச் செலவுக்கே தனியார் துறை சுப்பர் மார்க்கட் வலையமைப்பு மற்றும் லங்கா சதொச விற்பனை நிலையங்களின் ஊடாக நாடு பூராவும் நுகர்வோருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

இதன் விநியோகிக்கும் வலைமைப்பை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன் லொரியைப் பயன்படுத்துவதன் மூலம் அரிசி, தேங்காய், போன்றன வாரச் சந்தைகள் மற்றும் தனியுரிமை பெற்ற கடைகளின் ஊடாக விநியோகிக்கப்பட்டது. உற்சவ காலத்தைக் கருத்திற் கொண்டு இந்நிகழ்ச்சித் திட்டம் 2018 ஏப்ரல் மாதம் வரை நடைமுறைப்படுத்தப்படும். இச்சலுகைகளினால் ஏற்படக் கூடிய நட்டம் திறைசேரியினால் ஏற்கப்படும். விதி விலக்கான நிலைமைகளில் நுகர்வோரைப் பாதுகாப்பதற்காக அநேகமான உணவுப் பொருட்களின் மீது சில்லறை விலையொன்றை விதிப்பதற்கு அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. மேலும் அரசாங்கத்திற்குச் சொந்தமான நெற் சந்தைப்படுத்தும் சபையின் கீழ் காணப்படும் சகல நெல் இருப்புக்களையும் சதொச நிறுவனத்தின் ஊடாக அனைத்து லங்கா சதொச நிறுவனங்களின் ஊடாகவும் சலுகை அடிப்படையிலான விலையொன்றுக்கு விற்பனை செய்வதற்கு அரசாங்க நிகழ்ச்சித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சந்தையில் பற்றாக்குறையொன்றினை உருவாக்குவதன் மூலம் தெங்கு உற்பத்தியானது படிப்படியாக வீழ்ச்சியடைந்தது. 2017ஆம் ஆண்டில் தேங்காயின் விலை அதிகரித்தமையானது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். ஒரு தேங்காயின் விலை ரூபா. 100/- வை விட அதிகரித்தது. இந்நிலைமையை தீர்த்து வைப்பதற்காக பல்வேறு முன்னெடுப்புக்கள் எடுக்கப்பட்டன. அதன் படி, மேலே குறிப்பிட்ட நிலைமைகள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தேங்காய்த் துருவலைப் பயன்படுத்தும் கைத்தொழில்களுக்குத் தேவையான தேங்காய்த் துருவலை இறக்குமதி செய்வதன் ஊடாக நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தேங்காய்களை சாதாரண நுகர்வோரின் பாவனைக்கு வழங்கப்பட்டது. சந்தையில் தேங்காய்க்கு கொடுக்கக் கூடிய விலையொன்றை உறுதிப்படுத்துவதற்காக இறுதித் தீர்வொன்றாக ஒரு தேங்காய்க்கு ரூபா. 75/- உச்ச சில்லறை விலையொன்று நிர்ணயிக்கப்பட்டது. சாதாரண விலையொன்றின் கீழ் சாதாரண மக்களுக்கு தேங்காயை விநியோகிப்பதற்காக "கப்ருக" நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சந்தைக்குச் சந்தை லொரி மூலம் அனுப்பப்படுவதோடு, அதன் மூலம் சாதாரண விலையொன்றுக்கு பற்றாக்குறையின்றி தேங்காயைக் கொள்வனவு செய்வதற்கு நுகர்வோருக்கு வாய்ப்பொன்றளிக்கப்பட்டது.

### 2.6.4 அரிசியை இறக்குமதி செய்தல்

நீண்ட காலமாக நிலவிய வறட்சியின் காரணமாக நெல்லுற்பத்தி குறைவடைந்தமையானது அரிசிச் சந்தையானது உறுதியற்ற நிலைக்கு மாறுவதற்குக் காரணமாக அமைந்தது. உற்பத்திச் செலவுடன் ஒப்பிடுகையில் நுகர்வு விலைகள் நியாயமற்ற முறையில் உயர்வடைந்து சென்று ஆண்டு முழுதும் அரிசியின் விலை அதிகரித்துச் செல்லும் ஒரு போக்கை உருவாக்கியது. வறட்சி நிலைமையானது, தொடர்ச்சியாக மூன்று போகங்களிலும் காணப்பட்டமையினால் சந்தர்ப்ப சூழ்நிலைகள் மோசமடைந்ததோடு, சிறிய அளவிலான அரசித் தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு அரிசிச் சந்தையில் தனியுரிமை ஏற்பட்டது. இந்நிலைமையின் கீழ் உள்ளூர் அரிசி உற்பத்திக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டு வருந்த வேண்டிய ஒரு நிலைமையை தொடர்ந்து அரசாங்கத்தினால் முடியாது போய் விட்டது. அரிசியின் சில்லறை விலையைக் குறைப்பதன் மூலம் அரிசி இறக்குமதியுடன் தொடர்புடைய வரியை நீக்கி ஒரு கிலோ அரிசிக்கு ரூபா. 0.25/- விஷேட பொருட்களுக்கான வரியொன்றை மாத்திரம் அறவிடுவதன் மூலம் அரிசியை இறக்குமதி செய்வதற்கு தனியார் துறை மற்றும் அரச துறையின் இறக்குமதியாளர்கள் ஊக்குவிக்கப்பட்டார்கள். அதன்படி, 2017ஆம் ஆண்டில் மொத்த அரிசி இறக்குமதி 747,636 மெட்ரிக் தொன்களாகும். மேலும், 2018.02.25 ஆம் திகதி 863,480 மெட்ரிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டது.

## 2.7 கால்நடைத் துறையின் அபிவிருத்தி

### 2.7.1 கோழிப் பண்ணை சார்ந்த உற்பத்திக் கைத்தொழில் துறை

கோழிப் பண்ணை சார்ந்த உற்பத்திக் கைத்தொழில் துறையானது, 1980ஆம் ஆண்டிலிருந்து இது வரை 6.3 மில்லியனிலிருந்து 36.7 மில்லியன் வரை வளர்ச்சியடைந்துள்ளது. ஒரு நபருக்கான கோழி இறைச்சி நுகர்வானது, 100 கிராம் மற்றும் முட்டை 38 இலிருந்து கோழி இறைச்சி 8.5 கிராம் வரையிலும் முட்டை 108.4 வரையிலும் 1980 இலிருந்து இது வரை வளர்ச்சியடைந்துள்ளது. அதன்படி, கோழிப் பண்ணை சார்ந்த உற்பத்திக் கைத்தொழில் துறையானது அண்மைக் காலங்களில் பாரிய அளவிலான வளர்ச்சியொன்றைக் காட்டியுள்ளதோடு, அது 2016ஆம் ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 0.36 சதவீதப் பங்களிப்பினை வழங்குவதன் மூலம் 50 சதவீதத்தை விட அதிகமான பங்களிப்பொன்றை வழங்குகின்றது. அதன் பிரதிபலனாக கோழிப்பண்ணை சார்ந்த உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் குறைந்த விலையொன்றின் கீழ் விலங்குகளுக்கான புரதத்தை வழங்கும் அத்தியாவசிய உணவுப் பொருட்களாகக் கருதப்படுகின்றது. இலங்கையின் கோழி இறைச்சிக்கும், முட்டைக்குமான கேள்வி, உள்ளூர் உற்பத்தியின் மூலம் பூர்த்தி செய்யப்படுகின்றது. 2010ஆம் ஆண்டிலிருந்து 2017ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் கோழி இறைச்சி, மற்றும் முட்டை உற்பத்திகளின் வளர்ச்சி தொடர்பாக அட்டவணை 2.19 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.19 : உள்ளூர் கோழி இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தி தொடர்பான தகவல்கள்**

| வருடம் | கோழி இறைச்சி உற்பத்தி | | முட்டை உற்பத்தி | |
|---|---|---|---|---|
| | மதிப்பீடு (மெ.தொ. 000) | உண்மையான (மெ.தொ. 000) | மதிப்பீடு (மெ.தொ. 000) | உண்மையான (மெ.தொ. 000) |
| 2010 | பொருத்தமற்றது | 104.16 | பொருத்தமற்றது | 1,384.80 |
| 2011 | பொருத்தமற்றது | 116.76 | பொருத்தமற்றது | 1,711.22 |
| 2012 | பொருத்தமற்றது | 137.39 | பொருத்தமற்றது | 2,278.72 |
| 2013 | பொருத்தமற்றது | 144.54 | பொருத்தமற்றது | 2,074.94 |
| 2014 | 162.50 | 150.32 | 2,086.31 | 2,232.02 |
| 2015 | 152.00 | 164.45 | 2,203.00 | 2,294.08 |
| 2016 | 168.41 | 182.69 | 2,187.00 | 2,304.06 |
| 2017 | 189.21 | 196.60 | 2,739.12 | 2,856.09 |

மூலம்: பிராந்திய அபிவிருத்தித் திணைக்களம் இலங்கை மத்திய வங்கி

கோழிப் பண்ணை சார்ந்த உற்பத்திக் கைத்தொழில் துறை பிரதானமாக விலங்குணவுகளிலேயே தொடர்ந்து தங்கியிருக்கின்றதோடு, விலங்குணவைப் பயன்படுத்தும் பிரதான கூட்டுப் பொருள் சோளமாகும். தற்போது விலங்குணவிற்கான சோளத்தின் மொத்தத் தேவை அண்ணளவாக 500,000 ஆகும். குறைந்த நீர் மற்றும் உரப் பாவனை மற்றும் குறைந்த தொழிலாளர்களையும் பயன்படுத்துவதனால், சோளம் இந்நாட்டிற்குப் பொருத்தமான விவசாயப் பயிராக விளங்குகின்றது. உள்ளூர் சோள உற்பத்தி விலங்குகளின் உணவிற்கு தேவையான தன்னிறைவு மட்டத்தை அடைய முடிந்தது. ஆயினும், கடந்த ஆண்டில், வறட்சி நிலைமைகளின் காரணமாக மதிப்பிடப்பட்ட உள்ளூர் உற்பத்தியை அடைய முடியாமல் போய் விட்டது. அதன்படி, 2016/2017 பெரும் போகத்தில் சோளத்தின் அறுவடை 171,832 மெட்ரிக் தொன்களாகவும், சிறு போகத்தில் 26,535 மெட்ரிக் தொன்களாகவும் இருந்தது.

**அட்டவணை 2.20 : சோளப் பயிர்ச்செய்கை**

| போகம் | பயிரிடப்பட்ட நிலப்பரப்பு (ஹெக்டேயர்) | உற்பத்தி (மெட்ரிக் தொன்) |
|---|---|---|
| 2014/15 பெரும் போகம் | 60,954 | 230,871 |
| 2015 சிறு போகம் | 9,017 | 30,244 |
| 2015/16 பெரும் போகம் | 57,094 | 207,075 |
| 2016 சிறு போகம் | 10,650 | 36,555 |
| 2016/17 பெரும் போகம் | 69,206 | 171,382 |
| 2017 சிறு போகம் | 8,504 | 26,535 |

மூலம்: பிராந்திய அபிவிருத்தித் திணைக்களம் இலங்கை மத்திய வங்கி

அதன்படி, அரசாங்கத்தினால் விலங்குணவு உற்பத்திக்காக சோளம் ஒரு கி. கிராமிற்கு ரூபா. 10/- விசேட பண்டங்கள் மற்றும் சேவைகளுக்கான வரிச் சலுகை ஒன்றின் கீழ் சோளத்தை இறக்குமதி செய்வதற்கு இறக்குமதி அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 2017ஆம் ஆண்டில் விலங்குணவு உற்பத்தியாளர்களினால் 182,190 மெட்ரிக் தொன் சோளம் இச்சலுகை அடிப்படையிலான விலையின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

### 2.7.2 பால் உற்பத்தித் துறை

நாட்டின் பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்கு முக்கியமான பங்களிப்பொன்றை வழங்கும் கைத்தொழில்களில் ஒன்றாக பால் உற்பத்தித் துறையை அறிமுகப்படுத்தலாம். உள்ளூர் பால் உற்பத்தியை மேற்கொள்ளும் விவசாயிகளில் அநேகமானோர் மேலதிக ஆதாயமொன்றாக சிறிய அளவில் இப்பால் உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். அதன் பிரதிபலனாக வருடாந்த உள்ளூர் பால் உற்பத்தியானது அதிகரிக்கும் வீதமானது உயர் மட்டத்தில் காணப்படுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017ஆம் ஆண்டில் உள்ளூர் பால் உற்பத்தி 327.6 லீட்டர் மில்லியனிலிருந்து 396 லீட்டர் மில்லியன் வரை அதிகரித்துள்ளதோடு, அது 3 சதவீத வளர்ச்சியாகும். 2017ஆம் ஆண்டில், பாற்பசுக்களின் மொத்த எண்ணிக்கை 284,400 இலிருந்து 296,500 வரை அதிகரித்தமை இதற்குக் காரணமாகும். ஆயினும், இவ்வுள்ளூர் பால் உற்பத்தி மொத்த உள்நாட்டு பாலின் தேவையில் 40 சதவீதத்தை மாத்திரமே பூர்த்தி செய்வதோடு, எஞ்சிய 60 சதவீத பால் இறக்குமதி செய்வதன் மூலம் பூர்த்தி செய்யப்படுகின்றது.

வருடாந்தம் உள்ளூர் பாலின் நிரம்பல் அதிகரித்தாலும் கூட, அந்நிரம்பலுக்கும் மொத்த உள்ளூர் பாலின் கேள்விக்கும் இடையில் பெரிய இடைவெளி காணப்படுவதனால் அதனைக் குறைப்பதற்காக உள்ளுர் பாற் கைத்தொழிலை விருத்தி செய்து நிலைபேறானதும், மற்றும் இலபாகரமானதுமான கைத்தொழிலொன்றாக மாற்ற வேண்டியுள்ளது.

2020 ஆம் ஆண்டளவில் நாட்டின் பால் உற்பத்தியில் தன்னிறைவை அடைவதற்கான இலக்காக “உள்ளூர் உணவு உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்தின்” ஊடாக பூர்த்தி செய்வதற்கு அவசியமான திட்டங்கள் அரசாங்கத்தினால் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், உள்ளுர் பாற்கைத்தொழிலை விருத்தியும் நோக்குடன் திரவப் பாலுக்கு நிலவிய உத்தரவாத விலையை உயர்த்துதல் மற்றும் பால் சார்ந்த உற்பத்திகளுக்கு அவசியமான இயந்திரங்கள் மற்றும் பொறிகளுக்கான வரிச் சலுகையை வழங்கல் போன்ற செயற்பாடுகள் பல அரசாங்கத்தினால் எடுக்கப்பட்டுள்ளன.

2016 வரவு செலவுத் திட்டப் பிரேரணைகளுக்கு ஏற்ப உள்ளூர் பால் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கத்துடனும், மற்றும் நுகர்வோருக்கு மானிய விலைக்கு பால்மாவை வழங்கும் நோக்கத்துடனும் உள்ளூர் பால்மாவின் விலைகள் குறைக்கப்பட்டன. இவ்விலைகளைக் குறைப்பதற்கு ஒப்புரவாக உள்ளூர் பால் உற்பத்திக் கம்பனிகளுக்கு கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் பரிந்துரையுடன் வழங்கப்படும் விலை மானியம் 2017 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் படி, உள்ளூர் பால் உற்பத்திக் கம்பனிகளான மில்கோ (தனியார்) கம்பனி மற்றும் பெலவத்தை பால் உற்பத்திக் கம்பனி என்பனவற்றால் உற்பத்தி செய்யப்படும் 400 கிராம் மற்றும் ஒரு கிலோ கிராம் பால் பக்கட்டுக்களுக்கு ஈடு செய்யப்பட்ட தொகை கீழே தரப்பட்டுள்ளன.


அட்டவணை **2.21 : 2017 ஆம் ஆண்டில் உள்ளூர் பால் உற்பத்தியாளர்களுக்கு ஈடு செய்யப்பட்ட தொகை**

| கம்பனி | அலகு | சந்தை விலை (ரூபா.) | வரவு செலவுத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட விற்பனை விலை (ரூபா.) | மானிய விலை (ரூபா.) |
|---|---|---|---|---|
| மில்கோ (தனியார்) கம்பனி | கிராம் 400 | 320 | 295 | 218,562,500 |
| | கிலோ கிராம் 1 | 790 | 735 | 37,007,025 |
| பெலவத்தை பால் உற்பத்திக் கம்பனி | கிராம் 400 | 325 | 295 | 192,582,930 |
| | கிலோ கிராம் 1 | 810 | 735 | 113,159,550 |
| **மொத்தம்** | | | | **561,312,005** |

மூலம்: பிராந்திய அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

மேலே காட்டப்பட்டுள்ளபடி 2017ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் ரூபா. 561 மில்லியன் உள்ளூர் பால்மா உற்பத்தியாளர்களுக்கு விலை மானியத்தைச் செலுத்துவதற்கு வழங்கியள்ளது.

உள்ளூர் பால்மாவுடன் ஒப்பிடுகையில் இறக்குமதி செய்யப்படும் பால்மா, உள்ளூரின் பாலுக்கான தேவையில் 55 சதவீதத்தை மாத்திரம் பூர்த்தி செய்வதனால் உள்ளூர் கைத்தொழிலின் மீது குறிப்பிடத்தக்க மட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. உள்ளூரின் கேள்வியைப் பூர்த்தி செய்வதற்காக 217 ஆம் ஆண்டில் 84,430 மெட்ரிக் தொன் பூரண பாலாடையுடனான பால் மா இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டது. 2017ஆம் ஆண்டில் உலக சந்தையில் பால்மாவின் விலை துரிதமாக அதிகரித்ததோடு, உள்ளூர் பால்மா இறக்குமதியாளர்களின் வேண்டுகோளைக் கருத்திற் கொண்டு பால் மாவுக்கு விதிக்கப்பட்டுள்ள இறக்குமதித் தீர்வை வரியை 2017ஆம் ஆண்டிலும் திருத்தம் செய்ததோடு, அண்மைக்கால திருத்தம் 2017 ஜூலை மாதத்தில் மேற்கொள்ளப்பட்டது. குறிப்பிட்ட வரியின் மாற்றங்கள் வரைபடம் 2.7 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.



வரைபு 2.6 : பால் மாவின் சர்வதேச சந்தை விலை
(2014 ஜுன் - 2018 மார்ச் வரை)

## 2.8 இலக்காகக் கொள்ளப்பட்ட குழுக்களுக்கான விஷேட வெகுமதிகள்

### 2.8.1 சிரேஷ்ட பிரஜைகளுக்கான விசேட வட்டி வீதம்

நாட்டின் அபிவிருத்திக்குத் தமது இளம் பருவத்தை அர்ப்பணித்த சிரேஷ்ட்ட பிரஜைகளைப் பொருளாதார ரீதியாக வலுவூட்டுவதற்காக, அவர்களுக்கு பாதுகாப்பான ஓய்வூதியமொன்றை வழங்கும் நோக்குடன் அவர்களின் நிலையான வைப்புக்களுக்கு விசேட வட்டி வீதமொன்றை வழங்கியுள்ளது. அதன்படி, 2015 இடைக்கால வரவு செலவுத்திட்டத்தின் மூலம் சிரேஷ்ட பிரஜைகளின் நிலையான வைப்புக்களுக்கு 15 சதவீத விசேட வட்டியொன்றை வழங்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதன் மூலம், ஒரு மில்லியன் ரூபா. அல்லது அதற்குக் குறைந்த தொகையொன்றை அனுமதிப்பத்திரமுள்ள வர்த்தக வங்கியொன்றுக்கு அல்லது விசேட அனுமதிப்பத்திரமுள்ள வர்த்தக வங்கியொன்றுக்கு நிலையான வைப்பு ஒன்றை ஆரம்பிக்கும் இலங்கையின் சிரேஷ்ட பிரஜைகளின் நிலையான வைப்புக்களுக்கு 15 சதவீத வருடாந்த வட்டியொன்று வழங்கப்படும். மேலும் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு வங்கிகளினால் மேலதிகமாக இடப்படும் வட்டித் தொகை காலாண்டு ரீதியில் திறைசேரியினால் ஈடு செய்யப்படும்.

இத்திட்டம் 2017ஆம் ஆண்டிலிருந்து வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்காக அண்ணளவாக ரூபா. 13,642 மில்லியனை அரசாங்கம், பங்கேற்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் மூலமும் மற்றும் விசேட அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட வர்த்தக வங்கிகள் மேலதிக வட்டியைச் செலுத்துவதற்காக ஈடு செய்துள்ளது.

**அட்டவணை 2.22 : சிரேஷ்ட பிரஜைகளுக்கு வழங்கப்பட்ட விசேட வட்டித் திட்டத்தின் காலாண்டு முன்னேற்றம் 2017**

| விபரம் | பயனாளிகளின் எண்ணிக்கை | ஈடு செய்யப்பட்ட தொகை (ரூபா.) |
|---|---|---|
| 1 ஆம் காலாண்டு | 452,012 | 4,491,407,234 |
| 2 ஆம் காலாண்டு | 499,759 | 4,052,463,324 |
| 3 ஆம் காலாண்டு | 489,810 | 2,780,088,775 |
| 4 ஆம் காலாண்டு | 485,196 | 2,138,194,231 |
| **மொத்தம்** | | **13,462,153,564** |

மூலம்: பிராந்திய அபிவிருத்தித் திணைக்களம் , இலங்கை மத்திய வங்கி

மேலும், 2017 வரவு செலவுத் திட்டத்தின் மூலமும், இத்திட்டம் இடைநிறுத்தப்படாது தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டதோடு, 2017ஆம் ஆண்டில் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கும் மற்றும் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட விசேட வங்கிகளுக்கும் ரூபா. 1.5 மில்லியன் அல்லது அதற்குக் குறைவாக வைப்பிலிடும் இலங்கையின் சிரேஷ்ட்ட பிரஜைகளுக்கு ஒருவருக்கு 15 சதவீத வட்டியொன்றும் வழங்கப்படும்.

### 2.8.2 சமூகமயமாக்கப்பட்ட பயிற்சியாளர்களுக்கு சுய தொழில் கடன் திட்டம்

சமூகமயமாக்கப்பட்ட இளம் பயிற்சியாளர்கள் தமது வாழ்வாதாரத்தை வெற்றிகரமாக மேற்கொள்வதற்காக இக்கடன் திட்டம் மகத்தான ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இவ்விளைஞர்களுக்கு தொழில்முயற்சி அபிவிருத்திப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் அவர்களின் சமூக பொருளாதார அலுவல்களின் அபிவிருத்திக்காக பின் கண்காணிப்பு நிகழ்ச்சித்

திட்டங்களுக்கும் பங்கேற்கக் கூடியதாகவும் உள்ளது. மேலும், இக்கடன் திட்டத்தின் ஊடாக அவர்களின் வாழ்வாதாரத்தை வெற்றிகரமாக்குவதற்கான பின்னணி கட்டியெழுப்பப்படுவதோடு, சிறந்த பிரஜையாக சமூகத்துக்கு முகங்கொடுக்கக் கூடிய வகையில் பலம் வாய்ந்த அடிப்படையொன்றையும் உருவாக்குகின்றது. அதன்படி, தகுதி வாய்ந்த பயிற்சியாளர்களுக்கு விவசாய மற்றும் கால்நடை நடவடிக்கைகளுக்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கும், மனைக் கைத்தொழில்கள், கடற்றொழில் நடவடிக்கைகள், மற்றும் சிறு வியாபார நடவடிக்கைகள் போன்ற பல்வேறு நடவடிக்கைகளுக்கு ஒரு வருட சலுகைக் காலம் உள்ளடங்கலாக 10 வருட கடன் மீளச் செலுத்தலின் அடிப்படையில் கூடியது ரூபா. 250,000 வரையிலான கடன் தொகையொன்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இத்திட்டத்தின் இரண்டாவது கட்டம் 2016ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதோடு, ரூபா. 180 மில்லியன் தொகை, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் ஊடாக 843 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் முன்னேற்றம் பின்வருமாறு:

**அட்டவணை 2.23 : சமூகமயமாக்கப்பட்ட பயிற்சியாளர்களுக்கு கடன் திட்டத்தின் முன்னேற்றம் - 2017**

| மாவட்டம் | வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட கடன் தொகை (ரூபா. மில்லியன்) |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 326 | 71.1 |
| கிளிநொச்சி | 162 | 30.4 |
| முல்லைத்தீவு | 113 | 24.3 |
| வவுனியா | 39 | 8.6 |
| மன்னார் | 43 | 9.1 |
| அம்பாறை | 16 | 3.3 |
| திருகோணமலை | 76 | 18.5 |
| மட்டக்களப்பு | 68 | 15.1 |
| **மொத்தம்** | **843** | **180.4** |

மூலம்: பிராந்திய அபிவிருத்தித் திணைக்களம் இலங்கை மத்திய வங்கி

2ஆம் கட்டத்தில் ரூபா. 525 மில்லியன் கடன் தொகை இலங்கை வங்கி, மக்கள் வங்கி, மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி என்பனவற்றின் ஊடாக முறையே ரூபா. 250 மில்லியன், ரூபா. 200 மில்லியன் மற்றும் ரூபா. 75 மில்லியன் ஆக வழங்கப்பட்டுள்ளது. இக்கடன் திட்டத்தின் கீழ் கூடுதலான கடன் தொகை யாழ்ப்பாண மாவட்டத்தில் பதியப்பட்டுள்ளதோடு, அதன் மூலம் 326 பயிற்சியாளர்களுக்கு இதன் மூலம் பயனளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 4 சதவீத வட்டியின் கீழ் கடன் வழங்கப்படுவதோடு, 8 சதவீதம் அரசாங்கத்தினால் ஏற்கப்படுகின்றது. அதன்படி, 2017ஆம் ஆண்டில், அரசாங்கத்தினால் பங்கேற்பு நிதி நிறுவனங்களுக்கு வட்டி மானியமாக ரூபா. 2.7 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது.

# 3. நிறுவன மற்றும் நிர்வாக நடவடிக்கைகள்

## 3.1 நிருவாகப்பிரிவு

அபிவிருத்தி நிதித் திணைக்களமானது பணிப்பாளர் நாயகத்தின் கீழ் செயற்படுவதுடன் அது 13 பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் 21 உத்தியோகத்தர்ளை உள்ளடக்கியதாக மொத்தமாக 34 அலுவலர்களை கொண்டுள்ளது. திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினர் 41 ஆகும். 2017ஆம் ஆண்டின் இறுதியில் 07 பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டன. 2017ஆம் ஆண்டின் நிர்வாகம், நிதி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய தகவல்ளை பின்வருமாறு காட்டலாம்.

### 3.1.1 ஆளணித் தொகுதி

**அட்டவணை 3.1 : 2017.12.31ஆம் திகதிக்கு ஆளணித் தொகுதி**

| | பதவிகள் | அனுமதிக்கப்பட்ட பதவிகள் | தற்போது இருக்கும் பதவிகள் |
|---|---|---|---|
| 01 | பணிப்பாளர் நாயகம் | 01 | 01 |
| 02 | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | 01 | 01 |
| 03 | பணிப்பாளர் | 04 | 04 |
| 04 | பிரதிப் பணிப்பாளர்/உதவிப் பணிப்பாளர் | 10 | 06 |
| 05 | பிரதிப் பணிப்பாளர்/உதவிப் பணிப்பாளர் - இ.தி.சே. (மிகை ஊழியர் அடிப்படையில்) | 01 | 01 |
| 06 | தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 01 | 01 |
| 07 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 02 | 02 |
| 08 | தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப உதவியாளர் | 01 | 01 |
| 09 | பொது முகாமைத்துவ உதவியாளர் | 07 | 06 |
| 10 | முகாமைத்துவ உதவியாளர் | 01 | 01 |
| 11 | சாரதி | 07 | 05 |
| 12 | காரியாலய தொழில் உதவியாளர் | 05 | 05 |
| **மொத்தம்** | | **41** | **34** |

**புதிதாக 2017ல் திணைக்களத்தில் இணைந்தோர்**

1. திரு. கே.ஏ.எஸ்.எஸ்.கே. பெரேரா - மேலதிகப் பணிப்பாளர் நாயகம்
2. செல்வி. பீ.ஜி.பீ. ரஸாஞ்சலி - உதவிப் பணிப்பாளர்
3. செல்வி. பீ.எஸ்.என். பெரேரா - அபிவிருத்தி உத்தியோகத்தர்
4. திருமதி. எம்.ஜி.சி. கலாதேவி - பொது முகாமைத்துவ உதவியாளர்
5. திரு. எச்.ஏ.என். சாந்த - சாரதி
6. திரு. ஆர்.ஏ.டி.எம். ரணசிங்க - சாரதி
7. திரு. ஏ.ஏ. தாரிக் - காரியாலய தொழில் உதவியாளர்
8. திரு. கே.சீ.யூ. பேமதிலக - காரியாலய தொழில் உதவியாளர்

**2017ல் திணைக்களத்தில் இருந்து இடமாற்றலாகிச் சென்றோர்**

1. திருமதி. என்.எம்.கே. சமரநாயக்க - பிரதிப் பணிப்பாளர்
2. திரு. எம்.என்.எல். பிரேமதிலக - சாரதி
3. திரு. டீ.ஏ.எச். கனகரத்ன - சாரதி
4. திரு. ஆர்.ஏம். குலதுங்க - காரியாலய தொழில் உதவியாளர்

### 3.1.2 பணியாளர்களின் தகவல்கள்

**அட்டவணை 3.2 : 2017.12.31 வரையிலான பணியாளர் தகவல்கள்**

| பெயர் | புதவி | தொடர்பு கொள்ள வேண்டிய விபரங்கள் | | |
|---|---|---|---|---|
| | | தொலைபேசி | தொலைநகல் | மின் அஞ்சல் |
| திரு. ஏ.எம்.பீ.எம்.பீ. அத்தபத்து | பணிப்பாளர் நாயகம் | 2484542 | 2394908 | dgdf@dfd.treasury.gov.lk<br>atapattu.ampmb@dfd.treasury.gov.lk |
| திரு. கே.ஏ.எஸ்.எஸ்.கே. பெரேரா | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | 2151416 | 2484955 | perera.kassk@dfd.treasury.gov.lk |
| திரு. கே.ஜி.பீ. புஷ்பகுமார | பணிப்பாளர் | 2484507 | 2484955 | kumara.kgpp@dfd.treasury.gov.lk |
| திருமதி. எம்.கே.டீ.என். மாதம்பே | பணிப்பாளர் | 2484605 | 2484955 | madampe.mkdn@dfd.treasury.gov.lk |
| திரு. பீ.எம்.கே. ஹெட்டியாரச்சி | பணிப்பாளர் | 2484572 | 2484955 | hettiarachchi.pmk@dfd.treasury.gov.lk |
| திரு. எஸ்.எச்.வீ. குமார | பணிப்பாளர் | 2484595 | 2484955 | kumara.shv@dfd.treasury.gov.lk |
| திருமதி. டப்ளியூ.எல்.எம்.ஏ. லியனகே | உதவிப் பணிப்பாளர் | 2484594 | 2484955 | liyanage.wlma@dfd.treasury.gov.lk<br>manorigl@yahoo.com |
| செல்வி. ஆர்.ஏ.டீ.ஆர். ரணசிங்க | உதவிப் பணிப்பாளர் | 2484596 | 2484955 | ranasinghe.radr@dfd.treasury.gov.lk<br>radranitha@gmail.com |
| செல்வி. பீ.ஜி.பீ. ரஸாஞ்சலி | உதவிப் பணிப்பாளர் | 2484829 | 2484955 | rasanjalie.pgp@dfd.treasury.gov.lk |
| செல்வி. ஜே.டீ. கொடின்கடுவ | உதவிப் பணிப்பாளர் | 2484854 | 2484955 | kotinkaduwa.jd@dfd.treasury.gov.lk<br>dilruksiko@gmail.com |
| திரு. டப்ளியூ.பீ.எஸ். விக்ரமகே | உதவிப் பணிப்பாளர் | 2151494 | 2484955 | wickramage.wps@dfd.treasury.gov.lk |
| திருமதி. டீ.டப்ளியூ. குமாரகுரு | உதவிப் பணிப்பாளர் | 2484501 | 2484955 | kumaraguru.dw@dfd.treasury.gov.lk |

| பெயர் | பதவி | தொடர்பு கொள்ள வேண்டிய விபரங்கள் | | |
|---|---|---|---|---|
| | | தொலைபேசி | தொலைபேசி | தொலைபேசி |
| செல்வி. டீ.எல்.வி. விஜேரத்ன | உதவிப் பணிப்பாளர் | 2337527 | 2484955 | wijeratna.dlv@dfd.treasury.gov.lk |
| திரு. எச்.பீ.எஸ். சாந்த | தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 2484884 | 2484955 | shantha.hps@dfd.treasury.gov.lk |
| செல்வி ஏ.எம். விக்ரமசிங்க | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 2484884 | 2484955 | wickremasinghe.am@dfd.treasury.gov.lk |
| செல்வி. பீ.எஸ்.என். பெரேரா | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 2484884 | 2484955 | perera.psn@dfd.treasury.gov.lk |
| செல்வி ஜே.எம்.ஐ.ஏ. கீஷானி | தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப உதவியாளர் | 2484884 | 2484955 | geeshani.jmia@dfd.treasury.gov.lk |
| திருமதி. திலந்தி ஹேவாவசம் | பொது முகாமைத்துவ உதவியாளர் | 2484862 | 2484955 | hewawasam.t@dfd.treasury.gov.lk |
| திருமதி. எச்.ஏ.டீ.ஏ. நிலந்தி | பொது முகாமைத்துவ உதவியாளர் | 2484862 | 2484955 | nilanthi.hada@dfd.treasury.gov.lk |
| திருமதி. எம்.ஜி.சி. கலாதேவி | பொது முகாமைத்துவ உதவியாளர் | 2484862 | 2484955 | kaladevi.mgc@dfd.treasury.gov.lk |
| திரு. ஆர்.கே. லெனோரா | பொது முகாமைத்துவ உதவியாளர் | 2484862 | 2484955 | lenora.rk@dfd.treasury.gov.lk |
| திருமதி பி.ஏ.கே.எஸ்.பீ. ஜயவீர | பொது முகாமைத்துவ உதவியாளர் | 2484862 | 2484955 | jayaweera.baksp@dfd.treasury.gov.lk |
| செல்வி டி.பீ. சந்துனிக்கா | பொது முகாமைத்துவ உதவியாளர் | 2484862 | 2484955 | sandunika.dp@dfd.treasury.gov.lk |
| திரு. எஸ்.ஜே.ஏ.கே.டீ. ரணசிங்க | முகாமைத்துவ உதவியாளர் | 2484862 | 2484955 | ranasinghe.sjakd@dfd.treasury.gov.lk |
| திரு. எம்.பி. குணவர்தன | சாரதி | 2484855 | 2484955 | - |
| திரு. கே.டீ. கீர்த்திரத்ன | சாரதி | 2484855 | 2484955 | - |
| திரு. ஜே.எம்.ஏ.பீ. ஜயக்கொடி | சாரதி | 2484855 | 2484955 | - |
| திரு. எச்.ஏ.என். சாந்த | சாரதி | 2484862 | 2484955 | - |
| திரு. ஆர்.ஏ.டி.எம். ரணசிங்க | சாரதி | 2484862 | 2484955 | - |
| திரு. ஜே.எம்.டீ.ஜே.எச். ஹேமந்த | காரியாலய தொழில் உதவியாளர் | 2484855 | 2484955 | - |
| திரு. கே.சீ.யூ. பேமத்திலக | காரியாலய தொழில் உதவியாளர் | 2484855 | 2484955 | - |
| திரு. ஏ.ஏ.தாரிக் | காரியாலய தொழில் உதவியாளர் | 2484855 | 2484955 | - |
| திரு. ஜே.ஏ. எச்.சீ.கே. ஜயசிங்க | காரியாலய தொழில் உதவியாளர் | 2484855 | 2484955 | - |
| திரு. டி.ஈ.கே. பெலவத்தகே | காரியாலய தொழில் உதவியாளர் | 2484855 | 2484955 | - |

### 3.1.3 உள்நாட்டு பயிற்சி பாடநெறிகள், கல்விச் சுற்றுலாக்கள், கருத்தரங்குகள்

அட்டவணை 3.3 : உள்ளூர் பயிற்சி பாடநெறிகள், ஆய்வுப் பயணங்கள் மற்றும் கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகள்

| அலுவலர்களின் பெயர்கள் | பாடநெறியின் பெயர் | பாடநெறியின் காலப்பிரிவு | நடாத்தப்பட்ட நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|
| திரு. கே.ஜி.பீ. புஷ்பகுமார பணிப்பாளர் | ITMIS – தகவல் தொழில்நுட்ப அடிப்படை பயிற்சி | 17.05.2017-19.05.2017 | மிலோதா |
| திருமதி. எம்.கே.டீ.என். மாதம்பே பணிப்பாளர் | ITMIS – தகவல் தொழில்நுட்ப அடிப்படை பயிற்சி | 12.06.2017-14.06.2017 | மிலோதா |
| | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பொறுப்புக்கள் பற்றிய பயிற்சி | 06.07.2017 (ஒரு நாள்) | தேசிய மனிதவள அபிவிருத்தி சபை |
| | அரச கொள்முதல் மற்றும் ஒப்பந்த நிர்வாகம் தொடர்பான டிப்ளோமா | 12.06.2017-12.06.2018 | மிலோதா |
| திரு. பீ.எம்.கே. ஹெட்டியாரச்சி பணிப்பாளர் | ITMIS – தகவல் தொழில்நுட்ப அடிப்படை பயிற்சி | 12.06.2017-14.06.2017 | மிலோதா |
| திரு. எஸ்.எச்.வீ. குமார பணிப்பாளர் | ITMIS – தகவல் தொழில்நுட்ப அடிப்படை பயிற்சி | 12.06.2017-14.06.2017 | மிலோதா |
| திருமதி. டப்ளியூ.எல்.எம்.ஏ. லியனகே உதவிப் பணிப்பாளர் - நிதி | ITMIS – தகவல் தொழில்நுட்ப அடிப்படை பயிற்சி | 16.01.2017-18.01.2017 | மிலோதா |
| | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பொறுப்புக்கள் பற்றிய பயிற்சி | 06.07.2017 (ஒரு நாள்) | தேசிய மனிதவள அபிவிருத்தி சபை |
| | ITMIS – உள்ளக கணக்காய்வு பயிற்சி | 27.11.2017 (ஒரு நாள்) | மிலோதா |
| | ITMIS – சொத்துக்கள் முகாமைத்துவம் பற்றிய பயிற்சி | 29.11.2017-30.11.2017 | மிலோதா |
| செல்வி. ஆர்.ஏ.டீ.ஆர். ரணசிங்க உதவிப் பணிப்பாளர் | ITMIS – தகவல் தொழில்நுட்ப அடிப்படை பயிற்சி | 23.05.2017-25.05.2017 | மிலோதா |
| செல்வி. ஜே.டீ. கொடின்கடுவ உதவிப் பணிப்பாளர் | ITMIS – தகவல் தொழில்நுட்ப அடிப்படை பயிற்சி | 26.05.2017-30.05.2017 | மிலோதா |
| | அரச கொள்முதல் மற்றும் ஒப்பந்த நிர்வாகம் தொடர்பான டிப்ளோமா | 12.06.2017-12.06.2018 | மிலோதா |
| திரு. டப்ளியூ.பீ.எஸ். விக்ரமகே உதவிப் பணிப்பாளர் | ITMIS – தகவல் தொழில்நுட்ப அடிப்படை பயிற்சி | 17.05.2017-19.05.2017 | மிலோதா |
| திருமதி. டீ.டப்ளியூ. குமாரகுரு உதவிப் பணிப்பாளர் | ITMIS – தகவல் தொழில்நுட்ப அடிப்படை பயிற்சி | 16.01.2017-18.01.2017 | மிலோதா |
| செல்வி. டீ.எல்.வி. விஜேரத்ன உதவிப் பணிப்பாளர் | ITMIS – தகவல் தொழில்நுட்ப அடிப்படை பயிற்சி | 31.05.2017-02.06.2017 | மிலோதா |
| திரு. எச்.பீ.எஸ். சாந்த தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப உத்தியோகத்தர் | ITMIS – தகவல் தொழில்நுட்ப அடிப்படை பயிற்சி | 19.01.2017-23.01.2017 | மிலோதா |

| அலுவலர்களின் பெயர்கள் | பாடநெறியின் பெயர் | பாடநெறியின் காலப்பிரிவு | நடாத்தப்பட்ட நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|
| செல்வி ஏ.எம். விக்ரமசிங்க அபிவிருத்தி உத்தியோகத்தர் | ITMIS – தகவல் தொழில்நுட்ப அடிப்படை பயிற்சி | 19.01.2017-23.01.2017 | மிலோதா |
| செல்வி. பீ.எஸ்.என். பெரேரா அபிவிருத்தி உத்தியோகத்தர் | ITMIS – தகவல் தொழில்நுட்ப அடிப்படை பயிற்சி | 05.06.2017-07.06.2017 | மிலோதா |
| | ஆங்கிலத்தில் சான்றிதழ் | 26.09.2017-28.11.2017 | மிலோதா |
| செல்வி ஜே.எம்.ஐ.ஏ. கீஷானி தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப உதவியாளர் | ITMIS – தகவல் தொழில்நுட்ப அடிப்படை பயிற்சி | 09.01.2017-11.01.2017 | மிலோதா |
| திருமதி. திலந்தி ஹேவாவசம் பொது முகாமைத்துவ உதவியாளர் | ITMIS – தகவல் தொழில்நுட்ப அடிப்படை பயிற்சி | 01.02.2017-03.02.2017 | மிலோதா |
| | ITMIS – உள்ளக கணக்காய்வு பயிற்சி | 27.11.2017 (ஒரு நாள்) | மிலோதா |
| | ITMIS – சொத்துக்கள் முகாமைத்துவ பயிற்சி | 29.11.2017-30.11.2017 | மிலோதா |
| திருமதி. எச்.ஏ.டீ.ஏ. நிலந்தி பொது முகாமைத்துவ உதவியாளர் | கோவை மேலாண்மை மற்றும் பொது அலுவலக நிருவாக பயிற்சி | 27.03.2017-29.03.2017 | மிலோதா |
| | ITMIS – ஆளணி முகாமைத்துவ பயிற்சி | 28.04.2017 (ஒரு நாள்) | மிலோதா |
| | ITMIS – தகவல் தொழில்நுட்ப அடிப்படை பயிற்சி | 23.05.2017-25.05.2017 | மிலோதா |
| | சுயவிபரக்கோவை கையாளல் தொடர்பான பயிற்சி | 16.05.2017 (ஒரு நாள்) | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் |
| | பொது நிதி மற்றும் கணக்கியல் திறன் பற்றிய பயிற்சி | 16.08.2017-17.08.2017 | மிலோதா |
| | ITMIS – உள்ளக கணக்காய்வு பற்றிய பயிற்சி | 27.11.2017 (ஒரு நாள்) | மிலோதா |
| | ITMIS – சொத்துக்கள் முகாமைத்துவம் பற்றிய பயிற்சி | 29.11.2017-30.11.2017 | மிலோதா |
| திருமதி. எம்.ஜி.சி. கலாதேவி பொது முகாமைத்துவ உதவியாளர் | ITMIS – தகவல் தொழில்நுட்ப அடிப்படை பயிற்சி | 05.06.2017-07.06.2017 | மிலோதா |
| | லீவு எழுதுநரின் கடமைகளும் பொறுப்புக்களும் | 16.03.2017 (ஒரு நாள்) | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் |
| | களஞ்சிய முகாமைத்துவம் பற்றிய பயிற்சிநெறி | 07.09.2017-05.10.2017 | நிர்மாண இயந்திரஉபகரண பயிற்சி நிலையம் |
| | ITMIS – சொத்துக்கள் முகாமைத்துவம் பற்றிய பயிற்சிநெறி | 29.11.2017-30.11.2017 | மிலோதா |
| திரு. ஆர்.கே. லெனோரா பொது முகாமைத்துவ உதவியாளர் | ITMIS – தகவல் தொழில்நுட்ப அடிப்படை பயிறசி | 16.01.2017-18.01.2017 | மிலோதா |
| | இயந்திரம் மற்றும் வாகன முகாமைத்துவம் பற்றிய பயிற்சி | 28.03.2017-29.03.2017 | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் |
| | பற்று ஆவணங்கள் மற்றும் டென்டர் நடைமுறைகள் தயாரித்தல் பற்றிய பயிற்சி | 11.10.2017-13.10.2017 | மிலோதா |

| அலுவலர்களின் பெயர்கள் | பாடநெறியின் பெயர் | பாடநெறியின் காலப்பிரிவு | நடாத்தப்பட்ட நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|
| திருமதி பி.ஏ.கே.எஸ்.பி. ஜயவீர பொது முகாமைத்துவ உதவியாளர் | கோவை நிருவாகம் மற்றும் அலுவலக முறைமை தொடர்பான பயிற்சி | 27.03.2017-29.03.2017 | மிலோதா |
| | ITMIS – தகவல் தொழில்நுட்ப அடிப்படை பயிறசி | 26.05.2017-30.05.2017 | மிலோதா |
| | அரச நிதி மற்றும் கணக்கியல் பற்றிய பயிற்சி | 16.08.2017-17.08.2017 | மிலோதா |
| செல்வி டி.பி. சந்துனிக்கா பொது முகாமைத்துவ உதவியாளர் | கோவை நிருவாகம் மற்றும் அலுவலக முறைமை தொடர்பான பயிற்சி | 27.03.2017-29.03.2017 | மிலோதா |
| | ITMIS – தகவல் தொழில்நுட்ப அடிப்படை பயிற்சி | 31.05.2017-02.06.2017 | மிலோதா |
| | ITMIS – உள்ளக கணக்காய்வு பற்றிய பயிற்சி | 27.11.2017 (ஒரு நாள்) | மிலோதா |
| | ITMIS – சொத்துக்கள் முகாமைத்துவம் பற்றிய பயிற்சிநெறி | 29.11.2017-30.11.2017 | மிலோதா |
| திரு. எஸ்.ஜே.ஏ.கே.டீ. ரணசிங்க முகாமைத்துவ உதவியாளர் | கோவை நிருவாகம் மற்றும் அலுவலக முறைமை தொடர்பான பயிற்சி | 27.03.2017-29.03.2017 | மிலோதா |
| | ITMIS – தகவல் தொழில்நுட்ப அடிப்படை பயிறசி | 05.06.2017-07.06.2017 | மிலோதா |
| | அரச நிதி மற்றும் கணக்கியல் பற்றிய பயிற்சி | 16.08.2017-17.08.2017 | மிலோதா |
| | ஆங்கில பயிற்சி நான்றிதழ் | 26.09.2017-28.11.2017 | மிலோதா |
| | ITMIS – உள்ளக கணக்காய்வு பற்றிய பயிற்சி | 27.11.2017 (ஒரு நாள்) | மிலோதா |
| | ITMIS – சொத்துக்கள் முகாமைத்துவம் பற்றிய பயிற்சிநெறி | 29.11.2017-30.11.2017 | மிலோதா |
| திரு. டீ.ஏ.எச். கனகரத்ன சாரதி | சாரதிகளுக்கான திறனபிவிருத்தி வேலைத்திட்டம் | 23.05.2017-24.05.2017 | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் |
| திரு. ஜே.எம்.ஏ.பீ. ஜயக்கொடி சாரதி | சாரதிகளுக்கான பொருளியல் அறிவியல் பாதுகாப்பு ஓட்டுநர் பயிற்சி | 21.09.2017 (ஒரு நாள்) | நிர்மாண இயந்திரஉபகரண பயிற்சி நிலையம் |
| திரு. ஆர்.ஏ.டி.எம். ரணசிங்க சாரதி | சாரதிகளுக்கான பொருளியல் அறிவியல் பாதுகாப்பு ஓட்டுநர் பயிற்சி | 21.09.2017 (ஒரு நாள்) | நிர்மாண இயந்திரஉபகரண பயிற்சி நிலையம் |
| திரு. ஏ.ஏ. தாரிக் காரியாலய தொழில் உதவியாளர் | நிறுவன திறன் மேம்பாட்டுக்காக அலுவலக உதவியாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை | 25.08.2017 (ஒரு நாள்) | நிர்மாண இயந்திரஉபகரண பயிற்சி நிலையம் |
| திரு. ஜே.ஏ. எச்.சீ.கே. ஜயசிங்க காரியாலய தொழில் உதவியாளர் | நிறுவன திறன் மேம்பாட்டுக்காக அலுவலக உதவியாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை | 25.08.2017 (ஒரு நாள்) | நிர்மாண இயந்திரஉபகரண பயிற்சி நிலையம் |
| திரு. டி.ஈ.கே. பெலவத்தகே காரியாலய தொழில் உதவியாளர் | தரமான அலுவலக சூழலை ஏற்படுத்துவதற்காக அலுவலக உதவியாளர்களுக்கான பயிற்சி | 26.05.2017 (ஒரு நாள்) | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் |

மூலம் : அபிவிருத்தி நிதித் திணைக்களம்

### 3.1.4 வெளி நாட்டு பயிற்சி பாடநெறிகள், கல்வி சுற்றுலாக்கள், மற்றும் மாநாடுகள்

**அட்டவணை 3.4 : வெளி நாட்டு பயிற்சிப் பாடநெறிகள், ஆய்வுப் பயணம் மற்றும் கருத்தரங்குகள்**

| அலுவலர்களின் பெயர்கள் | பாடநெறியின் பெயர் | பாடநெறியின் காலப்பிரிவு | நாட்டின் பெயர் |
|---|---|---|---|
| திரு. ஏ.எம்.பீ.எம்.பீ. அத்தபத்து பணிப்பாளர் நாயகம் | இலங்கையின் சர்க்கரைத் தொழிற்றுரைக்கான அபிவிருத்தி கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான பிரதிநிதி | 11.02.2017-18.02.2017 | அவுஸ்திரேலியா |
| | பாக்கிஸ்தானிலிருந்து 200 மில்லியன் டாலர் கடன் வழங்குவதில் முதல் கூட்டு ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திற்கான பிரதிநிதி | 07.05.2017-10.05.2017 | பாகிஸ்தான் |
| | அரிசி இறக்குமதிக்கான பிரதிநிதி | 09.07.2017-13.07.2017 | பாகிஸ்தான் மற்றும் மியான்மார் |
| திரு. கே.ஏ.எஸ்.எஸ்.கே. பெரேரா மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை அபாயங்கள், சவால்கள், மற்றும் வாய்ப்புக்களை உலகளாவிய மதிப்பு சங்கிலிகளில் ஒருங்கிணைத்தல் | 12.09.2017-17.09.2017 | மொங்கோலியா |
| திரு. கே.ஜி.பீ. புஷ்பகுமார பணிப்பாளர் | இலங்கை நிருவாக சேவை 1ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களின் திறனாய்வு திறனை மேம்படுத்துவதற்கான பயிற்சி | 21.10.2017-27.10.2017 | மலேஷியா |
| திருமதி. எம்.கே.டீ.என். மாதம்பே பணிப்பாளர் | மூலோபாய மனிதவள முகாமைத்துவம் பற்றிய முகாமைத்துவ பயிற்சி | 12.02.2017-19.02.2017 | சிங்கப்பூர் |
| | இலங்கை நிருவாக சேவை 1ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களின் திறனாய்வு திறனை மேம்படுத்துவதற்கான பயிற்சி | 23.07.2017-29.07.2017 | மலேஷியா |
| திரு. பீ.எம்.கே. ஹெட்டியாரச்சி பணிப்பாளர் | இலங்கையின் சர்க்கரைத் தொழிற்றுரைக்கான அபிவிருத்தி கொள்கையை நடைமுறைப் படுத்துவதற்கான பிரதிநிதி | 11.02.2017-18.02.2017 | அவுஸ்திரேலியா |
| | பேச்சுவார்த்தைகளும், முரண்பாட்டுத் தீர்மானங்களும் டிதாடர்பான நிறைவேற்றுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 19.02.2017-26.02.2017 | சிங்கப்பூர் |
| திரு. எஸ்.எச்.வீ. குமார பணிப்பாளர் | பொதுக் கொள்கைகளை வலுப்படுத்துவதற்கான செயல்முறை பயிற்சி | 18.03.2017-27.03.2017 | அவுஸ்திரேலியா |
| திருமதி. டப்ளியூ.எல்.எம்.ஏ. லியனகே உதவிப் பணிப்பாளர் - நிதி | வலுவான ஆளுமை மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சிக்கான பயிற்சி | 18.11.2017-17.12.2017 | அவுஸ்திரேலியா |
| செல்வி. ஆர்.ஏ.டீ.ஆர். ரணசிங்க உதவிப் பணிப்பாளர் | அரசதுறைசார் தலைமைத்துவம் மற்றும் பிரச்சினைகளை கையாளல் மீதான நிர்வாக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 22.01.2017-29.01.2017 | சிங்கப்பூர் |
| திரு. டப்ளியூ.பீ.எஸ். விக்ரமகே உதவிப் பணிப்பாளர் | அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் நிறுவனங்களின் திறனை விருத்தி செய்வதற்கான கருத்தரங்கு | 15.03.2017-06.04.2017 | சீனா |
| திருமதி. டீ.டப்ளியூ. குமாரகுரு உதவிப் பணிப்பாளர் | வர்த்தக நிருவாகம் தொடர்பிலான முதுநிலை பட்டப்படிப்பு | 13.08.2017-31.10.2019 | ஜப்பான் |

| அலுவலர்களின் பெயர்கள் | பாடநெறியின் பெயர் | பாடநெறியின் காலப்பிரிவு | நாட்டின் பெயர் |
|---|---|---|---|
| செல்வி. டீ.எல்.வி. விஜேரத்ன உதவிப் பணிப்பாளர் | அரசதுறையில் தலைமைத்துவம் மற்றும் பிரச்சினைகளை கையாளல் தொடர்பான நிருவாக பயிற்சி | 22.01.2017-29.01.2017 | சிங்கப்பூர் |
| திரு. எச்.பீ.எஸ். சாந்த தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 4ஆம் ஆசிய தனிப்பட்ட பாலம் தொடர்பான பேரவைக்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப மாநாடு 2017 | 07.11.2017-11.11.2017 | தென் கொரியா |
| செல்வி ஏ.எம். விக்ரமசிங்க அபிவிருத்தி உத்தியோகத்தர் | அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கான சிறிய மற்றும் மற்றும் நடுத்தர அளவிலான தொழில் நிறுவனங்களின் திறனை வளர்த்தல் தொடர்பான கருத்தரங்கு | 15.03.2017-06.04.2017 | சீனா |

மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம்


## 3.2 நிதி தொடர்பான தகவல்கள்

திணைக்களத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு மீண்டுவரும் செலவினமாக 5,608,078,050 ரூபாவும் மூலதனச் செலவினமாக ரூபா. 8,449,099,000 வும் ஒதுக்கப்பட்டதுடன் மொத்தம் 14,057,177,050, ரூபா. 2017ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தினூடாக செலவுத்தலைப்பு 243ன் கீழ்கருத்திட்டம் 1 மற்றும் கருத்திட்டம் 2ன்கீழ் ஒதுக்கப்பட்டது. குறிப்பிட்ட ஆண்டின் மொத்த உண்மைச்செலவு 12,876,143,324 ரூபாவாகக் காணப்பட்டதோடு உண்மை மீண்டுவரும் செலவினங்களும் மூலதன செலவினங்களும் முறையே 4,770,946,489 ரூபாவும் 8,105,196,835 ரூபாவுமாகும். குறிப்பிட்ட ஆண்டில் செய்யப்பட்ட செலவு விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.5 : வரவு செலவுத்திட்ட நிதி முடக்கம் - 2017**

| செலவு விபரம் | மதிப்பீடு (ரூபா.) | உள்ள படி (ரூபா.) |
|---|---|---|
| **மீண்டுவரும் செலவினம்** | **5,608,078,050** | **4,770,946,489** |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 26,400,000 | 26,122,408 |
| பிரயாணச் செலவுகள் | 4,150,000 | 3,959,058 |
| வழங்கல்கள் | 3,149,075 | 2,593,359 |
| பராமரிப்புச் செலவினம் | 3,154,410 | 2,935,490 |
| சேவைகள் | 20,432,000 | 18,807,687 |
| மானியக் கொடுப்பனவுகள் (வட்டி மானியம்) | 5,550,792,565 | 4,716,528,487 |
| **மூலதனச் செலவினம்** | **8,449,099,000** | **8,105,196,835** |
| மூலதனச் சொத்துக்களைப் பற்றுதல் | 2,620,000 | 2,277,552 |
| கொள் திறன் அபிவிருத்தி | 1,000,000 | 936,161 |
| சிறிய மற்றும் நடுத்தர தொழில் துறையினை மேம்படுத்ததல் (ஜீடிஇஸட்) | 305,804,481 | 287,738,665 |
| சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான கடன் திட்டம் (ஆ.அ.வ.) | 7,640,479,000 | 7,498,406,525 |
| மூன்று களஞ்சியங்களின் நிர்மாணம் | 499,195,519 | 315,837,932 |
| **மொத்தம்** | **14,057,177,050** | **12,876,143,324** |

மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம்




**அட்டவணை 3.6 : அரச அலுவலர்களுக்கான முற்பணக் கணக்கு பீ – 2017**

| விபரம் | அனுமதி எல்லை | உண்மைத்தொகை |
|---|---|---|
| உச்சசெலவுஎல்லை | 3,500,000 | 2,669,746.80 |
| உச்சவரவு எல்லை | 850,000 | 1,784,712.43 |
| ஆகக்கூடிய கடன் எல்லை | 13,000,000 | 6,167,949.37 |

மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம்

### 3.3 கணக்காய்வு ஐய வினாக்கள்

கணக்காய்வுத் திணைக்களமும் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களமும் முன்வைத்த அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் விடையளித்ததோடு அவர்களால் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன.

**அட்டவணை 3.7 : கணக்காய்வு ஐய வினா - கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களம் - 2017**

| பெற்றதிகதி | விடயம் | பதில் அனுப்பிய திகதி |
|---|---|---|
| 2017.05.19 | 2016 வரவு செலவு திட்டத்தின் முன்மொழிவுகளுக்கமைய விலை குறைக்கப்பட்ட உள்நாட்டு பால்மா உற்பத்தியாளர்களுக்கான மானியம் வழங்கல் | 2017.06.16 |
| 2017.05.23 | ஒதுக்கீட்டுக்கணக்கு - 2016 | 2017.05.29 |
| 2017.06.13 | ஆளணியினர் ஆய்வு - 2016 | 2017.06.16 |
| 2017.07.12 | தலைப்பு 243 – அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (6) உறுப்புரைக்கு அமைய 2016ஆம் வருடத்திற்கான கணக்காய்வாளர் அறிக்கை | 2017.07.18 |
| 2017.07.12 | தலைப்பு 243 – அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை | 2017.08.08 |

மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம்

**அட்டவணை 3.8 : கணக்காய்வு வினா – முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம்**

| பெற்றதிகதி | விடயம் | பதில் அனுப்பிய திகதி |
|---|---|---|
| 2017.01.09 | உள்ளக கணக்காய்வு அறிக்கை | 2017.01.27 |
| 2017.02.28 | 2016 நான்காம் காலாண்டுக்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை | 2017.03.31 |
| 2017.06.23 | 2017 முதல் காலாண்டுக்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை | 2017.07.04 |
| 2017.10.12 | 2017 வருடத்திற்கான மூன்றாவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டம் தொடர்பாக தகவல்களைப் பெற்றுக் கொள்ளல் | 2017.10.16 |
| 2017.10.20 | 2017 இரண்டாம் காலாண்டுக்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை | 2017.11.02 |

மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம்